கர்த்தர் பெரியவர்

J.சாம் ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கர்த்தர் பெரியவர்!
(THE LORD IS GREAT)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : பெப்ருவரி 1968
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்டு 1988
மூன்றும் பதிப்பு : பெப்ருவரி 1990
நான்காம் பதிப்பு : மார்ச் 1991

நன்கொடை ரூ. 5/-

வெளியீடு எண் : 59

அச்சிட்டோர்:-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
60, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

அர்ப்பணம்

''என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்; மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்துகொண்டிருக்கிறீர்.

கர்த்தாவே, உமக்கு ஒப்பானவன் இல்லை; நீரே பெரியவர்; உமது நாமமே வல்லமையில் பெரியது'' *(சங் 104:1, எரேமியா 10:6).*

மிகவும் பெரியவரான என் அருமை ஆண்டவரே, உமக்கே இந்நூலை காணிக்கையாக்குகிறேன்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	கர்த்தர் பெரியவர்!	5
2.	யோனாவிலும் பெரியவர்!	12
3.	சாலொமோனிலும் பெரியவர்!	21
4.	ஆபிரகாமிலும் பெரியவர்!	30
5.	யாக்கோபிலும் பெரியவர்!	36
6.	தேவ ஆலயத்திலும் பெரியவர்!	42
7.	நம்மில் இருப்பவர் பெரியவர்!	51
8.	பொற்சிலையிலும் பெரியவர்!	57
9.	அவர் பெரியவராய் இருப்பார்!	63
10.	அவர் பெரியவர்! பெரியவர்!	67

கர்த்தர் பெரியவர்!

''கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்தரிக்கப்படத் தக்கவருமாயிருக்கிறார்'' (சங் 96:4).

நம் கர்த்தர் பெரியவர்! அவர் ஒருவரே ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர்! சகல கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரமானவர்.

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் கண்களிலும் கர்த்தர் பெரியவர் என்கிற தரிசனம் இருக்க வேண்டும். என் ஆண்டவர் பெரியவராய் இருக்கிறார் என்ற அறிக்கை உள்ளத்திலும் உதடுகளிலும் எப்பொழுதும் இருக்க வேண்டும்! அப்பொழுது—

உலகத்தின் பிரச்சனைகள் சிறியதாய் மறைந்து போகும்!

சத்துரு பெலனற்றவனாய் ஓடி மறைவான்!

மாம்சம் ஒருபோதும் நம்மை மேற்கொள்ளவே முடியாது!

ஆம், நம் கர்த்தர் மெய்யாகவே மகா பெரியவர்! மகிமையானவர்! வானத்தைச் சிங்காசனமாகவும் பூமியைப் பாதபடியாகவும் கொண்டவர்! அவரை எதிர்த்து நிற்க யாராலும் முடியாது! அவர் சர்வ வல்லமையுள்ளவர்!

தேவபிள்ளையே, என் கர்த்தர் பெரியலர் என்று அறிக்கையிட்டுக் கொண்டே முன்னேறிச் செல்வாயாக! உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்ந்து செல்வேன். என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் என்று ஜெயத்தை சுதந்தரித்துக் கொள்வாயாக!

கர்த்தர் பெரியவராய் உன்னோடு கூட வருகிறபடியால் ஒருவனும் ஒருக்காலும் எதிர்த்து நிற்க முடியாது!

ஒருவனும் எதிர்நிற்கக் கூடாத வாக்கினாலும் வல்லமையினாலும் கர்த்தர் உன்னை நிரப்புவார்! நம் கர்த்தர் பெரியவர்! அல்லேலூயா!

தாவீதின் தேவன் பெரியவர்:-

மிகத் தாழ்வில் தன் வாழ்க்கையை ஆரம்பித்து, மிக உன்னத நிலையில் முடித்தவர் தாவீது! அவர் அவ்வளவாக மகிமையாய் உயர்த்தப்பட்டு உயர்ந்ததற்கு முக்கிய மூல காரணம், ''கர்த்தர் பெரியவர்'' என்ற தரிசனம் எப்பொழுதும் அவரது கண்களில் இருந்துகொண்டே இருந்ததுதான். அவர் சொல்கிறதைக் கவனியுங்கள்.

''கர்த்தர் பெரியவரும் மிகவும் ஸ்தோத்தரிக்கப்படத் தக்கவருமாயிருக்கிறார்'' (சங் 96:4).

''கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்'' (சங் 48:1).

''நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது'' (சங் 147:5).

''என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்; மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்துகொண்டிருக்கிறீர்'' (சங் 104:1).

முதலில் அவர் தனக்குள்தானே, ''கர்த்தர் பெரியவர்'' என்று மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி தன் விசுவாசத்தை மிக அதிகமாகப் பெருக்கி பெலன்கொண்டார். பின்பு தன்னைச் சூழ உள்ள மக்களுக்கு கர்த்தருடைய மகத்துவத்தை அறிவிக்க எண்ணி, ''நம்முடைய ஆண்டவர் பெரியவர்'' என்று உற்சாகப்படுத்தினார். பின்பு கர்த்தரை ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்தும்போது அன்போடுகூட, ''என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்'' என்று கூறிப் புகழ்ந்தார்.

அல்லேலூயா! இதுதான் தாவீதின் வெற்றிக்கும் மகா பெரிய உயர்வுக்கும் காரணம்!

தேவபிள்ளையே, அதிகாலை வேளைகளில் கர்த்தர் பெரியவர் என்பதை ஜெபத்தோடு தியானிப்பாயாக! உன் ஆத்துமா "கர்த்தர் பெரியவர்" என்று அறிக்கையிடும் போது திடன் கொள்ளும். நாள் முழுவதும் நீ சந்திக்கிற ஒவ்வொருவரிடமும் கர்த்தர் பெரியவர் என்பதை உற்சாகத்துடன் கூறு. இரவில் படுக்கச் செல்லும்போது கர்த்தரிடம், நீர் பெரியவர் என்று சொல்லி அவரை மகிமைப்படுத்து. அப்பொழுது நீ ஒருபோதும் அசைக்கப்படுவதே இல்லை!

ஆமென், கர்த்தர் பெரியவர்!

சரித்திரம் சாட்சி கூறும்:-

சாட்சி ஆகமங்களை மீண்டும் மீண்டும் வாசித்து தியானித்த தாவீது, எவ்விதமாய் கர்த்தர் பார்வோனைப் பார்க்கிலும் பெரியவராய் இருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்தார்; எப்படி சிவந்த சமுத்திரத்திலும் பெரியவராயிருந்து அதை இரண்டாய்ப் பிரித்து தம் ஜனங்களுக்குப் பாதை உண்டாகச் செய்தார்; எப்படி யோர்தானிலும் பெரியவராயிருந்து பெருக்கெடுத்து ஓடி வரும் அந்த ஆற்றை பின்னிட்டுத் திரும்பச் செய்தார்; எப்படி எரிகோ மதில்களிலும் கர்த்தர் பெரியலராயிருந்து அது நொறுங்கி விழும்படி செய்தார் என்பதையெல்லாம் தாவீது அறிந்து கொண்டார்.

என் ஆண்டவர் பெரியவர், அவர் என்னோடிருக்கிறவர்!

என் ஆண்டவர் பெரியவர், அவர் எனக்காக யுத்தம் செய்வார்!

என் ஆண்டவர் பெரியவர், அவர் என் சத்துருக்களையெல்லாம் என் பாதபடியாக்கிப் போடுவார்!

என் ஆண்டவர் பெரியவர், அவர் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார்!

அனுபவத்தில் கர்த்தர் பெரியவர்:-

ஒருமுறை மந்தையிலுள்ள ஆடுகளைத் திருடுவதற்கு கரடி வந்தது. கரடியின் தோற்றம், அதனுடைய மிருக பெலன் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் அதை தாவீது பொருட்படுத்தாமல் "கர்த்தர் பெரியவர்" என்பதை மாத்திரமே உணர்ந்தார். நேராகச் சென்று அந்த கரடியை கோலினால் அடித்துக் கொன்றார்.

இன்னொரு முறை சிங்கம் எதிர்கொண்டு வந்தது. கர்த்தர் பெரியவர் என்ற தரிசனமும், விசுவாசமும் சிங்கத்தை சிறியதாக்கிற்று. தன்னோடு கர்த்தர் பெரியவராய் யூதராஜசிங்கமாய் இருக்கிறார் என்று தியானித்த தாவீது அந்த சிங்கத்திற்கு எதிர்கொண்டுபோய், அதை ஒரு ஆட்டுக்குட்டியைப்போல கிழித்துப் போட்டார்!

தேவபிள்ளையே, கர்த்தர் பெரியவர் என்பதை செயல் முறைக்குக் கொண்டுவா. வெறும் ஏட்டுச் சுரைக்காயாக கர்த்தர் பெரியவர் என்று வாசித்துக் கொண்டிராமல் அனுபவத்தில் கர்த்தர் பெரியவர் என்பதை நிரூபித்துக் காட்டு!

இஸ்ரவேலரெல்லாரும் அன்று கோலியாத்தைக் கண்டு பயப்பட்டனர். அவனது உருவமும், தோற்றமும், படை ஆயுதங்களும் பயமுறுத்துவதாக இருந்தன. அவனது உருவத்தை இஸ்ரவேலர் எப்படிக் கண்டார்கள் தெரியுமா?

"அவன் உயரம் ஆறு முழமும் ஒரு ஜாணுமாம். அவன் தன் தலையின்மேல் வெண்கலச் சீராவைப் போட்டு ஒரு போர்க் கவசம் தரித்துக்கொண்டிருப்பான். அந்தக் கவசத்தின் நிறை ஐயாயிரம் சேக்கலான வெண்கலமாயிருக்கும். அவன் தன் கால்களிலே வெண்கலக் கவசத்தையும் தன் தோள்களின்மேல் வெண்கலக் கேடகத்தையும் தரித்திருப்பான். அவனுடைய ஈட்டித்தாங்கு நெசவுக்

காரரின் படை மரத்தின் கனதியும், அவன் ஈட்டியின் அலகு அறுநூறு சேக்கல் இரும்புமாயிருக்கும். பரிசை பிடிக்கிறவன் அவனுக்கு முன்பாக நடப்பான்''
(1 சாமுவேல் 17:4-7).

எவ்வளவுக்கெவ்வளவு கோலியத்தை பெரியவனாக இஸ்ரவேலர் கண்டார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவனைப் பற்றி பயந்து நடுங்கினார்கள். யார் யார் பிரச்சனைகளை, போராட்டங்களை, பாடுகளை பெரிதாகப் பார்க்கிறார்களோ அவர்கள் தோல்வியடைவது உறுதி!

ஆனால் தாவீதோ கோலியாத்தை சிறியவனாய்க் காண கற்றுக்கொண்டான். கோலியாத்தின் பெலனை அற்பமானதாக எண்ண அறிந்திருந்தான். கோலியாத்தின் பராக்கிரமம், படை ஆயுதங்களெல்லாம் தாவீதுக்கு மிகவும் சாதாரணமாக தோன்றியது. காரணம், கர்த்தரை மகா பெரியவராய் கோலியாத்தண்டை தாவீது நிறுத்தியதுதான்.

சிறியதும் பெரியதும்:-

ஒரு முறை ஒரு கிராமத்திற்கு நான் போயிருந்த போது, ஒரு சிறுவன் என்னிடம் ஒரு பெரிய கோடு ஒன்றை போட்டுக் காண்பித்து, இந்த கோட்டை அழிக்காமல், தொடாமல் இதை சிறியதாக்கிக் காண்பிக்க முடியுமா என்று கேட்டான். எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தேன். அந்த கோட்டை சிறியதாக்கும் வழி எனக்குத் தெரியவில்லை. முடிவாக, அவன் அந்த கோட்டை எனக்கு சிறியதாக்கிக் காண்பித்தான். எப்படி தெரியுமா? அந்த கோட்டின் அருகே, அதைவிட மிகப்பெரிய கோடு வரைந்தபோது முதல் கோடு தானாகவே சிறியதாகி விட்டது!

எத்தனை பெரிய உண்மையை அந்தச் சிறுவன் எளிதாய் விளக்கி விட்டான்! ஆம், எவ்வளவு பெரிய பிரச்சனை உனக்கு எதிராக வந்தாலும், அதை நீ மேற்கொள்ள அந்த பிரச்சனையின் அருகே கர்த்தரைப் பெரியவராய்

நிறுத்து! அப்பொழுது மலையைப்போன்ற பிரச்சனை களும் போராட்டங்களும் பனியைப்போல் விலகியறை யும்!

கோலியாத் உலகத்தார் பார்வைக்குப் பெரியவன் தான். ஆனால் தாவீதின் பார்வைக்கு மிகவும் சிறியவன். காரணம், தாவீது தன் தேவனாகிய கர்த்தரை கோலியாத் அண்டையில் நிறுத்தி வைத்து கோலியாத்தை சிறியவ னாக்கினான். அதன் பின்பு அவனை வெற்றி சிறப்பது எளி தாயிருந்தது.

தாவீது கோலியாத்தை நோக்கியல்ல, தனக்கு ஒத் தாசை வரும் பர்வதங்களுக்கு நேராகவே தன் கண்களை ஏறெடுத்தார். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்பதே அவரது விசுவாச அறிக்கையாயிருந்தது!

கர்த்தர் பெரியவர்! வானத்தையும் பூமியையும் உண் டாக்கின என் தேவன் பெரியவர்! அவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவர்! என் தேவன் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்! வானம் அவ ருக்கு சிங்காசனம், பூமி அவருடைய பாதபடி! அவரே ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாய் இருக்கிறார் அல்லேலூயா!

பெரியவராய் காணுங்கள்:-

அநேகர், கிறிஸ்துவை சிறிய குழந்தையாகவே காண் கிறார்கள். மரியாளின் மடியில் இருக்கும் பால்குடி பாலகனா கவே எண்ணுகிறார்கள். இன்னும் சிலர், ஆறடி உயரமான மனுஷனாக சிந்திக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களால் சோதனை நேரங்களில் ஜெயம் காணவே முடியாது.

ஒரு முறை பேதுரு கடலில் இறங்கி நடந்தார் அவ ருக்கு முன்னே கிறிஸ்து நின்று கொண்டிருந்தார். அதே நேரத்தில் ஒரு பெரிய அலை ராட்சஷ உருவமாய் எழுந்தது. ஒருவேளை, அந்த அலை பதினைந்து அடி உயரமாக இருந் திருக்கக்கூடும்.

பேதுரு எண்ணிப் பார்த்திருப்பார். இந்த அலை ஏறக்குறைய பதினைந்து அடி உயரம், இயேசுவோ ஆறடி உயரமானவர் தானே? அப்படியானால் இந்த அலை அவரைவிட பெரியது அல்லவா? இது உயரமாய், பயங்கரமாய், வல்லமையாய் வருகிறதே என்று எண்ணும்போதே பேதுரு தண்ணீருக்குள் அமிழத் தொடங்கினார்.

கிறிஸ்துவை அலைகளைவிட பெரியவராய், காற்றையும் கடலையும் அதட்டி அமரச் செய்கிற பெரியவராய், அலையின் வலிமையைப் பார்க்கிலும் மகா வல்லமை பொருந்திய பெரியவராய் அன்று பேதுரு கண்டிருப்பாரானால் அமிழ்ந்து போக வேண்டிய அவசியமே இல்லை!

தேவபிள்ளையே, உன் பிரச்சனைகள் எவ்வளவு பெரியதானாலும் கர்த்தர் அதைவிட பெரியவராயிருந்து உன்னை விடுவிக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அவரால் செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ?

கர்த்தர் பெரியவர்! உனது பிரச்சனைகள் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் அதிலிருந்து உன்னை விடுவிக்க வல்லமையுள்ளவர்!

கர்த்தர் பெரியவர்! உன் வியாதி எவ்வளவு கொடியதாயிருந்தாலும் அதை சுகமாக்க வல்லமையுள்ளவர்!

கர்த்தர் பெரியவர்! உன் கண்ணீரின் துயரம் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் உன்னை ஆறுதல்படுத்த வல்லமையுள்ளவர்!

கர்த்தர் பெரியவர்! உன் கடன் தொல்லை, வருமானக் குறைவு, வறுமைகள் உன்னை எவ்வளவு தாழ்த்தியிருந்தாலும் உன்னை தூக்கிவிட்டு நிலைநிறுத்த வல்லமையுள்ளவர்!

கர்த்தர் பெரியவர்! நம் சிருஷ்டி கர்த்தர் பெரியவர்! ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிற நம் அருமை இரட்சகர் பெரியவர்!

ஆமென்; அல்லேலூயா!

அத்தியாயம் 2

யோனாவிலும் பெரியவர்!

''யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்''
(மத் 12:41).

நம்முடைய கர்த்தர் பெரியவர். அவருடைய வல்லமையும் கிருபையும் அளவிடப்பட முடியாதது. அவர் எவ்வளவு பெரியவர் என்பதை வார்த்தையால் வருணிக்கவும் முடியாது.

கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை அளக்க முயற்சிப்பது ஒரு சிறு எறும்பு சூரியனை எவ்வளவு பெரியது என்று அளக்க முயற்சிப்பதற்கு சமானம் ஒரு கடல் எவ்வளவு பெரியது என்று ஒரு குழந்தை தன்னுடைய கையிலுள்ள சிப்பியினால் அளப்பதற்கு சமானம்.

ஒரு எறும்பினால் சூரியன் எவ்வளவு பெரியது என்று கண்டு கொள்ள முடியாது; ஒரு குழந்தையினால் கடல் எவ்வளவு பெரியது என்று அளந்துவிட முடியாது. அப்படியே, கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை நாம் நம்முடைய சிறிய மூளை அறிவினால் அளந்துகொள்ள இயலாது.

ஆனால் நம்முடைய அருமை ஆண்டவர் தான் எவ்வளவு பெரியவர் என்பதை விளக்கும்படியாக நாம் தெரிந்து வைத்திருக்கிற சிலரை நிறுத்தி, தான் அவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை விளக்கிக் காண்பிக்கிறார். சாதாரணமாக, ஒருவர் எப்படியிருப்பார் என்பதை அறியாதவர்களுக்கு அதை விளக்கிக் காண்பிக்கும்படி இவரை விட அவர் உயரமாய் இருப்பார் என்று ஒப்பிட்டுச் சொல்வதைப் போல கர்த்தரும் தான் எவ்வளவு பெரியவர் என்பதை நமக்கு விவரிக்கிறார். நாம் புரிந்து கொள்ளும்படி முதலாவதாக தன்னை யோனாவிலும் பெரியவராக நமக்கு வெளிப்படுத்துகிறார்.

வேதம் சொல்கிறது, ''யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு, நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ் சுமத்துவார்கள்'' (மத் 12:40, 41).

யோனா ஒரு ஊழியக்காரர்! ஒரு தீர்க்கதரிசி! ஒரு சுவிசேஷகன். வேதத்தில் சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவரான யோனாவின் பெயரில் யோனாவின் புத்தகம் காணப்படுகிறது. மொத்தம் நான்கு அதிகாரங்களே இந்த சரித்திர புத்தகத்திலிருந்தாலும் வாசிப்பதற்கு விறுவிறுப்பாகவும், ஆச்சரியமாகவும், மெய்சிலிர்க்க வைப்பதாகவும் அமைந்திருக்கிறது.

யோனாவை நாம் எப்போதும் சிறியவராகவே எண்ணுகிறோம். ஏதோ ஆமணக்குச் செடியின் கீழ் உட்கார்ந்து முறுமுறுத்துக் கொண்டிருக்கிறவராகக் காண்கிறோம். எப்போதும் எரிச்சலுடையவராகவும், ஆத்தும பாரம் இல்லாதவராகவும், கர்த்தரை எதிர்த்துப் பேசுகிறவராகவுமே நினைக்கிறோம்.

ஆனால் யோனா அவ்வளவு சிறியவர் அல்ல. யோனா பெரியவர்தான். ஆண்டவர் அசிரியாவிலுள்ள நினிவே பட்டணத்திற்கு ஒரு ஊழியக்காரனைத் தெரிந்தெடுக்க நினைக்கும்போது யோனாவையே தெரிந்தெடுத்தார். அது இஸ்ரவேலிலுள்ள பட்டணமல்ல; அது புறஜாதிகளுடைய ஒரு பட்டணம். அங்கேயிருந்த ஜனங்கள் இஸ்ரவேலரல்ல; கர்த்தரைப் பற்றி அறியாத புறஜாதியினரே அங்கு வாழ்ந்தார்கள். இஸ்ரவேலுக்குள் பிரசங்கிப்பது எளிது. ஆனால் கர்த்தரை அறியாத புறஜாதிகளிடத்தில் சென்று பிரசங்கிப்பது கஷ்டம்தான். இந்த கஷ்டமான

பணிக்கு கர்த்தர் யோனுவைத் தெரிந்தெடுத்திருப்பாரென்றல் யோனு உண்மையிலேயே பெரியவர்தான்.

யோனுவினுடைய பிரசங்கமும் வல்லமையுள்ளதாக இருந்தது. யோனு பிரசங்கித்தது ஒரே பிரசங்கம்தான். அந்த பிரசங்கத்தின் சாராம்சம்: ''இன்னும் நாற்பது நாட்கள் உண்டு; அப்போது நினிவே கவிழ்க்கப்பட்டுப் போகும்'' என்பதே (யோனு 3:4). யோனுவினுடைய இந்த பிரசங்கம் தீப்பொறிபோல வேலை செய்தது. அதனுல் விளைந்த விளைவுகளை வேதத்தில் வாசிக்கும்போது நமக்குப் பெரிதும் ஆச்சரியமாக இருக்கிறது.

அந்த பிரசங்கத்தைக் கேட்ட ஒரு இலட்சத்து இருபதாயிரம்பேர் உடனே இரட்சிக்கப்பட்டார்கள். அந்த பிரசங்கத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட ராஜா உடனே தன்னுடைய வஸ்திரத்தை கிழித்து இரட்சிக்கப்பட்டான். மிருக ஜீவன்களெல்லாம் உபவாசம் இருந்தன. எவ்வளவு பெரிய எழுப்புதல் பார்த்தீர்களா? யோனு உண்மையிலேயே பெரியவர்தான்.

இதுவரை எனக்குத் தெரிந்த எழுப்புதல் பிரசங்கிமாரின் ஒரே பிரசங்கத்தில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டதாக சரித்திரமில்லை. நோவா நூற்று இருபது வருடம் பிரசங்கம் பண்ணியுங்கூட அவனுடைய சொந்த குடும்பத்திலுள்ள எட்டு பேரை மாத்திரமே ஆதாயம் பண்ண முடிந்ததேயொழிய வேறு ஒருவரையும் ஆதாயம் பண்ண முடியவில்லை. பேதுரு பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கத்தால் ஐயாயிரம்பேர் இரட்சிக்கப்பட்டார்கள் என்று நாம் வாசிக்கிறேம். அந்த தொகைகூட யோனுவினுல் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு சமானமல்ல

தற்பொழுது சரித்திரத்தில் வேல்ஸ் தேசத்து எழுப்புதலைப் பற்றி படிக்கிறேம் 1903 ஆம் ஆண்டு பற்றிப்பிடித்த வேல்ஸ் எழுப்புதலினுல் எத்தனையோ வருடங்க

களுக்கு பின்புதான் ஒரு இலட்சம் மக்கள் கர்த்தரண்டை திரும்பினார்கள்.

நாம் ஒருபோதும் யோனாவை அற்பமானவராக எண்ணக்கூடாது. யோனாவை பரியாசம் பண்ணி கேலி செய்யவும் கூடாது. அநேக கிறிஸ்தவ நாடகங்களில் யோனா பரியாசம் பண்ணப்படுவதைப்பார்க்கும்போது வேதனையடைகிறேன். வேதம் யோனாவை பெரியவன் என்று சொன்னாலும்கூட நம் கர்த்தரே யோனாவிலும் பெரியவர்! இன்றைக்கு நம்முடைய ஆண்டவருடைய பிரசங்கத்தால் உலகத்தில் கோடிக் கோடியாக கிறிஸ்தவர்கள் பெருகியிருக்கிறார்கள். ஆகவே, கர்த்தர் பெரியவர்!

யோனா மூன்று நாட்கள் மீனின் வயிற்றில் இருந்தான். ஆனால் மனுஷ குமாரனோ பூமியின் இருதயத்தில் மூன்று நாட்கள் கழித்துவிட்டு வெற்றியோடு உயிர்த்தெழுந்தார். ஆகவே, நம்முடைய தேவன் பெரியவர்!

யோனாவின் பிரசங்கம் ஒரே ஒரு பட்டணத்திற்கு, அதாவது நினிவேக்கும் மட்டுமே அறிவிக்கிற செய்தியாக இருந்தது. ஆனால் கர்த்தருடைய வார்த்தைகளோ முழு உலகத்திற்கும் செல்கிறது. அவருடைய நாமத்தினால் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் யாவருடைய முழங்கால்களும் முடங்குகிறது. கர்த்தர் பெரியவர்!

யோனாவினுடைய செய்தியைப் பார்க்கிலும் கர்த்தருடைய சத்தியம் பெரியது! அழியும் என்று பிரசங்கித்தான் யோனா! பிழைப்பாய் என்று பிரசங்கித்தார் இயேசு! சாவீர்கள் என்று பிரசங்கித்தான் யோனா! நித்திய ஜீவனைப் பெறுவீர்கள் என்று பிரசங்கித்தார் இயேசு! கவிழ்க்கப்படும் என்று பிரசங்கித்தான் யோனா! காத்துக் கொள்ளப்படுவீர்கள் என்று பிரசங்கித்தார் இயேசு!

யோவான் 3:17 சொல்லுகிறது: உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவனுடைய குமாரனை உலகத்

திற்கு அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவ தற்காகவே அவரை அனுப்பினர். தேவபிள்ளேயே, யோனு விலும் பெரியவர் உன் அருகில் இருக்கிறார். அவரை நீ பற்றிப் பிடித்துக் கொள்வாய். என்றால், நித்திய அழிவிற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவாய். அன்று எருசலேமில், சுப் பர் நகூமில் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் உன்னு டைய காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவரு டைய செய்தி இன்றைக்கும் முடிவடைந்து விடவில்லே. அவருடைய இரக்கங்களும் முடிவடைந்து விடவில்லே. யோனுவிலும் பெரியவராகிய கிறிஸ்துவினுடைய இரத் தத்தால் பரலோக வாசல்கள் இன்று உனக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

யோனு ஒரு ஊழியக்காரன். ஆனால் கிறிஸ்துவோ எஜமானனாக இருக்கிறார். எந்த ஊழியக்காரனும் எஜமா னிலும் பெரியவனல்ல!

கர்த்தர் ஒரு ஊழியக்காரனை கனம்பண்ணுகிறார் அவனுக்கு அதிகாரத்தையும், வல்லமையையும், கிருபை களேயும் தந்தருளுகிறார். அதே நேரத்தில் நாம் ஊழியக் காரரை தேவனேப் பார்க்கிலும் அதிகமாய் உயர்த்தி விடக் கூடாது. அநேகர் கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய கனத்தையும் மகிமையையும் ஊழியருக்கு செலுத்துகிற படியினால் தாங்களும் இடறிப் போகிறார்கள். ஊழியர் களேயும் இடறப் பண்ணுகிறார்கள்.

இதை வாசிக்கும் தேவபிள்ளேயே, நீ ஒரு ஊழியக்கார னாக இருந்தால் உனக்குள்ளே ஒரு ஆவிக்குரிய பெருமை வராதபடி காத்துக்கொள். என்னுடைய ஊழியம், என்னு டைய பிரசங்கத்தால் இரட்சிக்கப்பட்டவர்கள், என்னுல் குணமடைந்தவர்கள் என்று சொல்லாமல் உன்னே கிறிஸ்துவிற்கு முன்பாக தாழ்த்தி கிறிஸ்துவை பெரிய வராக உயர்த்துவாயாக!

ஒரு முறை சாது சுந்தர்சிங் ஊழியத்திற்காக கேரளா விலுள்ள திருவனந்தபுரத்திற்கு வந்திருந்தார் அங்கு ஒரு ஏழை சகோதரி மரித்துப்போன தன்னுடைய மகனை தோளில் சுமந்துகொண்டு கதறி அழுது கொண்டே சாது சுந்தர் சிங்கிடத்தில் கொண்டு வந்தாள். அவளுடைய கண்ணீர் சாது சுந்தர்சிங்கை உருகப் பண்ணிற்று. அவர் அந்த குழந்தையை வாங்கி தேவனுக்கு நேராக தன்னுடைய கண்களை ஏறெடுத்து அந்த குழந்தைக்காக ஊக்கமாக ஜெபித்தார். அந்த ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் அற்புதத்தைச்செய்து அந்தக் குழந்தையை உயிர்ப்பிக்கப் பண்ணினார்! அந்தக் குழந்தை கண் திறந்தது. தாயின் முகத்தைப் பார்த்து சிரித்தது. தாய்க்கு இருந்த சந்தோஷம் சொல்லி முடியாதது.

உடனே அவள் சாது சுந்தர்சிங்கின் கால்களில் விழுந்து, "ஐயா, நீங்களே கண் கண்ட தெய்வம்; நீங்கள் தான் உண்மையான கடவுளின் அவதாரம். நீங்கள் என்னுடைய பிள்ளையை உயிர்ப்பித்து கொடுத்தீர்கள்" என்று பாதத்தைப் பற்றி பிடித்துக்கொண்டு வணங்கினாள்.

அதைக் கண்ட சாதுவின் உள்ளம் குத்துண்டது. "அம்மா நான் ஒரு மனுஷன் தான்; என்னை நீங்கள் வணங்கக்கூடாது" என்று எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்பதாக இல்லை. மனம் உடைந்த சுந்தர்சிங் ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, நீரே ஜீவனுள்ள தேவன், நீரே இந்த குழந்தைக்கு உயிரூட்டினவர். உம்முடைய நாமத்தினால்தான் இந்த குழந்தை உயிரடைந்தது. இப்படியிருக்க, இந்த சகோதரி என்னை வணங்குகிறாளே. என்னை மன்னியும்" என்று கதறினார். மாத்திரமல்ல, தனக்கு இனி அற்புதங்களைச் செய்கிற வரம் வேண்டாமென்று சொல்லி தேவன் தனக்குக் கொடுத்த வரத்தை யும் கர்த்தரிடம் திருப்பிக் கொடுத்தார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, எந்த ஊழியக்காரனையும்விட கர்த்தரே பெரியவர் என்பதை மறந்து

போகாதே. ஒருபோதும் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய கனத்தையும் மகிமையையும் தனிப்பட்ட மனிதருக்கு செலுத்தாதே.

அநேகம் பேர் பிரச்சனை நேரத்தில் எந்த ஊழியக்காரரிடத்தில் செல்லலாம் என்று எண்ணுகிறார்கள் யாரிடத்தில் போனால் தீர்க்கதரிசனம் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். நல்லதுதான். ஆனால் கர்த்தரிடத்தில் செல்லாமல், கர்த்தரிடம் ஜெபிக்காமல், கர்த்தரிடத்தில் உன்னுடைய பாரத்தை வைக்காமல் ஒருபோதும் ஊழியர்களிடத்தில் செல்லாதே. முதலில் கர்த்தரிடத்தில் அறிவி. பிறகு கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் செல்லலாம்.

ஒரு ஊழியர் மாலை நேரத்தில் தன்னுடைய மனைவியோடுகூட அவசரமாக பிரயாணப்பட்டுக் கொண்டிருந்தார். அவரை ஒரு சகோதரி எதிர்கொண்டு ஓடி வந்தாள். "ஐயா, இன்றைக்கு காலையிலிருந்து நான் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் பல போராட்டங்கள். ஒன்றிரண்டு மணி நேரம் நான் உங்களோடுகூட என்னுடைய இருதயத்தின் பாரங்களையெல்லாம் கொட்டவேண்டும். உங்களிடம் சொன்னால்தான் எனக்கு அனைத்திலிருந்தும் விடுதலை கிடைக்கும்" என்று சொன்னாள்.

அதைக் கேட்ட அந்தப் போதகர் அமைதியாக, "சகோதரியே, உன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் நான் கேட்பதற்கு தயார்தான். ஆனால் என்னைப் பார்க்கிலும் அவைகளைக் கேட்க கர்த்தர் வல்லவராக இருக்கிறார். இன்று காலையில் நீ எவ்வளவு நேரம் கர்த்தரிடத்தில் பேசினாய்? எவ்வளவு நேரம் ஜெபித்தாய்? எவ்வளவு நேரம் கர்த்தருடைய பாதத்தில் உன்னுடைய பாரங்களை பகிர்ந்து கொண்டாய்?" என்று கேட்டார்.

அவளால் மறுமொழி ஒன்றும் சொல்ல முடியவில்லை. "ஐயா, உங்களிடம் ஜெபிக்கும்படிதான் ஓடி வந்தேன்"

என்றுள். அவர் சுருக்கமாக சொன்னார், ''கர்த்தர் என்னிலும் பெரியவராக இருக்கிறார்! நான் உனக்காக இரத்தம் சிந்தவில்லை; ஆனால் அவர் உனக்காக இரத்தம் சிந்தினார். நான் உனக்காக மரிக்கவில்லை; அவர்தான் உனக்காக மரித்தார். உனக்கு எந்த ஆறுதலையுமோ அல்லது உன்னுடைய பிரச்சனைகளுக்கு தீர்வைத் தருவதற்கு எனக்கு எந்த வல்லமையும் இல்லை ஆனால் கர்த்தரோ பெரியவரும், வல்லமையுள்ளவருமாக இருக்கிறார். நீ அவரிடம் ஜெபித்து விட்டு அதற்கு பின்பு என்னிடம் வா'' என்று சொல்லி அவளை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார்.

தேவ ஊழியனே, உன்னுடைய ஊழியத்தின் நோக்கமெல்லாம் உன்னையும் உன்னுடைய ஊழியத்தையும் பிரஸ்தாபப்படுத்துவதாக இருக்க வேண்டாம். நீ கர்த்தரையும் அவருடைய வல்லமையையும் அவருடைய மகத்துவத்தையுமே உயர்த்திப் பேசுவாயாக! கர்த்தரே பெரியவராக உன்னுடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் விளங்கட்டும். ஜனங்களை உன் பக்கம் இழுக்க முயற்சிக்காதே. ஜனங்களை கர்த்தர் பக்கம் இழுக்கவே முயற்சி செய். கர்த்தரை சுயநலமாக உனக்கென்று நீ பயன்படுத்திக்கொள்ள எண்ணாதே கர்த்தர் உன்னை பயன்படுத்தும்படி அவருடைய கரத்தில் உன்னைத் தாழ்த்தி ஒப்புக் கொடுப்பாயாக.

அன்று யோவான்ஸ்நானகன் தன்னைத் தாழ்த்தி, ''நான் சிறுகவும் அவர் பெருகவும்'' என்று சொன்னார். இது எத்தனை நல்ல முன்மாதிரி என்று சிந்தித்துப் பாருங்கள். நான் சிறுகவேண்டும்; ஆனால் எனக்காக ஜீவன் தந்து என் மேல் அன்பு செலுத்தி என்னை மீட்டுக்கொண்ட என் அருமை ஆண்டவர் பெருகவேண்டும்! அவருடைய மந்தைகள் பெருகவேண்டும்! அவருடைய ஊழியங்கள் பெருக வேண்டும். அவர் பெரியவராய் சிங்காசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும்.

தேவபிள்ளையே, உன்னைத் தாழ்த்தி கர்த்தரை உயர்த்துவாயாக. தாவீது தன்னை ஒரு புழு என்று சொல்லி

தேவனுக்கு முன்பாக தாழ்த்தினர் (சங் 22:6). பாவிகளிலே பிரதானமான பாவி நான் என்று அப்போஸ்தலனுகிய பவுல் தன்னை தாழ்த்துகிருர் (I தீமோ 1:15). பவுலின் ஊழியத்தின் வெற்றிக்குக் காரணம் அவர் தன் வாழ்க்கையெல்லாம் கர்த்தர் பெரியவர் என்பதை உயர்த்திக் காண்பித்ததுதான்.

கர்த்தர் பெரியவர்! அவர் எந்த ஒரு தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் பெரியவர்! எந்த ஒரு சுவிசேஷகனைப் பார்க்கிலும் பெரியவர்! எந்த ஒரு ஊழியக்காரனைப் பார்க்கிலும் பெரியவர்! அவருடைய கிருபைகள் பெரியது! அவருடைய இரட்சிப்பு பெரியது! அவருடைய காருணியம் மகா பெரியது! ஆமென்; அல்லேலூயா!

அத்தியாயம் 3

சாலொமோனிலும் பெரியவர்!

''தென்தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக்கேட்க வந்தாள்; இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்'' (மத் 12:42).

நம் தேவன் பெரியவர். உலகத்திலுள்ள சகல ராஜாக்களிலும் சக்கரவர்த்தியிலும் அவர் பெரியவராக இருக்கிறார். அவருடைய ஆளுகையும் அதிகாரமும் மிகப்பெரியதாக இருக்கிறது.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடைய நம்முடைய தேவன் தம்மை சாலொமோனிலும் பெரியவர் என்று சொல்லுகிறதைப் பார்க்கிறோம்.

1. ஆளுகையில் பெரியவர்
2. ஞானத்தில் பெரியவர்
3. மகிமையில் பெரியவர்

1. ஆளுகையில் பெரியவர்:-

நாற்பதாயிரம் சதுர மைல்களை திறமையாக அரசாண்ட ராஜாதான் சாலொமோன். அவர் தன்னைப் பற்றி கூறும்போது, ''இதோ, நான் பெரியவனாயிருந்து எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்'' என்று குறிப்பிடுகிறார் (பிர 1:16).

எருசலேமை ஆண்ட எல்லா ராஜாக்களின் நாட்களைப் பார்க்கிலும் சாலொமோனின் ராஜ்ய நாட்களில்தான் மிகுந்த சமாதானம் உண்டாகியிருந்தது. யுத்தங்களின்றி தேசம் இளைப்பாறினது.

சாலொமோனின் ஆட்சி உலகமெங்குமுள்ள மக்களைக் கவர்ந்ததாக இருந்தது. அந்த ஆட்சி முறைகளைப் பார்க்கும்படி சேபா ராஜஸ்திரீ எத்தனையோ ஆயிரம் மைல் பிரயாணம் செய்து தென் தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தாள்.

கர்த்தர் தமக்குப் பிரியமானவனுக்கு ஆளுகையையும், அதிகாரத்தையும் கொடுக்கிறார். சகல அதிகாரமும் கர்த்தரிடத்திலிருந்தே வருகிறது. கர்த்தர் நினைக்கிற ராஜா பெரியவன்தான். ஆனாலும் ராஜாக்களை அபிஷேகம் பண்ணுகிற ராஜாதி, ராஜாவாகிய கர்த்தர் எல்லாரிலும் பெரியவர் என்பதை மறந்துபோகக்கூடாது. நம்முடைய தேவன் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர். ''ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் என்பது நம்முடைய கர்த்தருடைய நாமம்'' (வெளி 19:16).

எந்தெந்த ராஜாக்கள் கர்த்தரை தஞ்சமாகக் கொண்டார்களோ, கர்த்தர் அவர்களை மேன்மைப்படுத்தினார். இங்கிலாந்தை சிறப்பாக ஆண்ட விக்டோரியா மகாராணியின் கண்களில் கர்த்தர் பெரியவர் என்ற தரிசனம் இருந்தது. அவருடைய முடிசூட்டு விழாவில் கிரீடத்தைச் சூடினவராக ஆலயத்தில் அமர்ந்திருந்தபோது அந்த ஆலயத்திலுள்ள பாடல் குழுவினர் ''எல்லாருக்கும் மா உன்னத கர்த்தாதி கர்த்தரே, மெய்யான தேவ மைந்தன். நீர் வாழ்க! நீர் வாழ்க!'' என்ற பாடலை பாடியபோது உடனே மகாராணி தன்னுடைய இருக்கையிலிருந்து எழுந்தார். இராஜ கிரீடத்தைக் கழற்றி வைத்தார்.

உடனே அருகிலிருந்தவர்கள் பதறிப்போய், ''ராணி அவர்களே! நீங்கள் எழுந்திருக்க வேண்டாம். நீங்கள் அமர்ந்திருங்கள். சபையார் எழும்பினால் போதும்'' என்று சொன்னார்கள். ஆனால் விக்டோரியா மகாராணி சொன்னார்: ''நான் என்னிலும் பெரிய ராஜாதி ராஜாவின் பிரசன்னத்தில் நிற்கிறேன்; ஆகவே, நான் பணிவோடு நடந்துகொள்ளவேண்டும்.'' கர்த்தர் அந்த மகாராணியை

அளவில்லாமல் ஆசீர்வதித்தார். அவர்களுடைய நாட்களில்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உலகமெல்லாம் பரவியது. பிரிட்டிஷாரீன் சரித்திரத்தில் சூரியன் அஸ்தமித்ததில்லை என்ற பழமொழி வழங்கலாயிற்று.

தேவபிள்ளையே, கர்த்தர் பெரியவர் என்கிற தரிசனத்தோடு நீ முன்னேறுவாயென்றால், நீ எல்லா திசைகளிலும் இடங்கொண்டு பெருகுவாய். கர்த்தர் பெரியவராய் உன்னோடுகூட இருப்பார்.

சாலொமோன் ராஜா பெரியவர்தான். அவருடைய ஆளுகை, அவருடைய அரண்மனை, அவருடைய அந்தஸ்து எல்லாம் பெரியதுதான். ஆனாலும் எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு. அவருடைய சாம்ராஜ்யம் ஒரு எல்லைக்குட்பட்டதுதான். ஆனால், கர்த்தருடைய ஆளுகையோ வானத்திலும், பூமியிலும், பூமிக்கு கீழும் கடந்து செல்கிறது. சாலொமோனின் அதிகாரத்திற்கு அவனுடைய ஜனங்களும் அவனுடைய படை வீரர்களுமே கீழ்ப்படிந்திருப்பார்கள். ஆனால் கர்த்தருடைய அதிகாரத்திற்கோ சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், தேவ தூதர்களும் கீழ்ப்படிகின்றனர்.

நம்முடைய கர்த்தர் பெரியவராக இருக்கிறபடியினால் நாமும் பெரியவர்களாக இருக்கிறோம். ராஜாதி ராஜா நம்மோடுகூட இருந்து நம்மை பெரியவர்களாக்குகிறார். வெளிப்படுத்தல் 1:6 சொல்கிறது, ''நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தன்னுடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினார்'' ஆம், நாம் ராஜாவின் பிள்ளைகள்!

அன்றைக்குப் பார்வோன் ராஜாவைப் பார்த்து பயப்பட்ட மோசேயைப் பார்த்து கர்த்தர் கூறினார்: ''நான் உன்னை பார்வோனுக்குத் தேவனாக்கினேன்'' என்றார் (யாத் 7:1). அப்படியே ஆண்டவர் உலகத்திலுள்ள எந்த

பெரிய அதிகாரியிலும் பெரிய அதிகாரியாகவும், எந்த பெரிய ராஜாவிலும் பெரிய ராஜாவாகவும் நம்மை வைத்திருக்கிறார்.

ஆகவேதான், பழைய ஏற்பாட்டிலுள்ள கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தேவனுடைய பிள்ளைகள் ராஜாக்களைக் குறித்துப் பயப்படவில்லை. பெரிய தாவீது ராஜா பாவம் செய்தபோது நாத்தான் தீர்க்கதரிசி பயப்படாமல், நீயே அந்த மனுஷன், கொலைக்குப் பாத்திரவானாக இருக்கிறாய் என்று சொல்லி பாவத்தை உணர்த்தி தைரியமாய் கண்டித்தார்.

ஏரோது பாவம் செய்தபோது யோவான் ஸ்நானகன் முகத்தாட்சண்யமில்லாமல், தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல், நீர் உம்முடைய சகோதரனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல என்று குற்றஞ்சாட்டினார். ஒரு எலியா சாதாரண மனுஷனாக இருந்தும் ஆகாப் ராஜாவைக் குறித்துப் பயப்படாமல் நேருக்கு நேராக முகமுகமாய் நின்று:''என் வாக்கின்படியேயன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்கிறேன்'' என்றான் (I இராஜா 17:1).

தேவபிள்ளையே, பயப்படாதே! உன்னுடைய வாழ்க்கையின் பாதையிலும் ராஜாதி ராஜா உன்னோடு கூட வருகிறார். அவர் பெரியவர். அவர் வல்லமையுள்ளவர். ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டார். அவர் உன் வார்த்தைகளைக் கனப்படுத்தி உன்னை ஆசீர்வதிப்பார்.

உசியா ராஜா மரணமடைந்தபோது,இனி எந்த ராஜா இஸ்ரவேலில் எழும்புவார் என்று அறியும்படி ஏசாயாதேவனுடைய ஆலயத்திற்கு சென்று தேவனுடைய பிரசன்னத்தில் ஜெபித்துக்கொண்டிருந்தார். கர்த்தர் அவருக்கு உசியாவிற்குப் பிறகு எழும்பப்போகிற ராஜாவைக் குறித்து

வெளிப்படுத்தாமல் பெரியவரும் ராஜாதி ராஜாவுமாகிய தம்மையே வெளிப்படுத்த சித்தங்கொண்டார். முதலாவது, நீ உன் தேவனை பெரியவராகப் பார்க்க கற்றுக்கொள். அப்போதுதான் இந்த உலகத்தின் பிரச்சனைகளை சிறியதாக பார்க்க உன்னால் முடியும். அன்றைக்கு ஏசாயா தீர்க்கதரிசி பார்த்தபோது ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கிறதைக் கண்டார்.

சாலொமோனின் சிங்காசனத்தையும் கர்த்தருடைய சிங்காசனத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். சாலொமோன் சிங்காசனம் பூமிக்குரிய பொருட்களினால் ஆனது ஆனால் கர்த்தரோ, வானம் எனக்குச் சிங்காசனம் என்று சொல்கிறார். அவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் இருக்கிறார். ஆ! நம் தேவன் எவ்வளவு பெரியவர்! அவருடைய ஆட்சி எத்தனை மகத்துவமானது.

2 ஞானத்தில் பெரியவர்:-

சாலொமோனின் ஞானம் பெரியதாக இருந்தது. வேதம் சாலொமோனின் பெரிய ஞானத்தைக் குறித்துச் சொல்லும்போது பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாக இருந்தான் (I இரா 10:23; II நாளா 8:22) என்று கூறுகிறது.

I இராஜா 4:34 சொல்கிறது, "சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானா ஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்க வந்தார்கள்."

I இராஜா 10:4-6 சொல்கிறது: சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவன் கட்டின அரண்மனையையும், அவன் பந்தியின் போஜன பதார்த்தங்களையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்

திரக்காரரரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடை மண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொண்டாள்.''

கர்த்தர், சாலொமோனுக்கு அவ்வளவு ஞானத்தைக் கொடுத்திருந்தாலும் அந்த ஞானத்தை அவன் ஆவிக்குரிய பிரகாரமாக செலவிடாமல் உலகத்திற்கடுத்த காரியங்களிலே செலவிட்டான். அவனுடைய ஒவ்வொரு மனைவிக்கும் அரண்மனைகளைக் கட்டினான். மனைவிகளின் தேவர்களுக்கு விக்கிரக தோப்புகளை உண்டாக்கினான் அவ்வளவு ஞானமிருந்தும் தேவஞானம் இல்லாதபடியினால் அவன் சீர்கெட்டுப்போனான். மறுஜாதியான ஸ்திரீகள் அவனைப் பாவஞ் செய்யப் பண்ணினார்கள் என்றால் அவனுடைய ஞானத்தினால் என்ன பிரயோஜனம்? என்று நெகேமியா புலம்பிச் சொல்கிறார். ''இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் இதினாலே பாவஞ் செய்தானல்லவா? அவனைப் போன்ற ராஜா அநேகம் ஜாதிக்குள்ளே உண்டாயிருந்ததில்லை. அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான்; தேவன் அவனை இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக வைத்தார். அப்படிப்பட்டவனையும் மறு ஜாதியான ஸ்திரீகள் பாவஞ் செய்யப் பண்ணினார்களே'' (நெகேமியா 13:25)

இன்று அநேக தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்கு ஞானமில்லையே என்று கவலைப்படுகிறார்கள். எனக்குப் படிப்பறிவில்லையே; ஆங்கில அறிவு போதாதே; கல்விமான் அருகிலே நான் எப்படி இருப்பது என்றெல்லாம் கலங்குகிறார்கள். தேவபிள்ளையே, சாலொமோனிலும் பெரியவர் உன்னோடுகூட இருக்கிறார். அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார் (I கொரி 1:31)

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார், ''ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத்து தர்க்க சாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா?

எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று. யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள். கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்கு பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு கிறிஸ்து தேவ பெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்

இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது, மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது. எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்! மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தின் பலவீனமுள்ளவைகளைத் தெரிந்துகொண்டார் (I கொரி 20:27).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டிருக்கிறார்! அவருடைய ஞானம் உலக ஞானத்தைப் பார்க்கிலும் பெரியது. நீ கலங்காதே! ஞானத்தின் பிதாவானவர் சாலொமோனிலும பெரியவராக நீ பேசவேண்டிய வார்த்தைகளை உன் வாயில் தந்தருளுவார். பரலோக ஞானத்தால் உன்னை நிரப்பியருளுவார்!

3. **மகிமையில் பெரியவர்:-**

சாலொமோனின் மகிமை பெரியதாக இருந்தது. இயேசுகிறிஸ்து அதைச் சுட்டிக்காட்டி சொல்லும்போது,

''சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லே என்று சொல்கிறேன் என்ருர்'' (மத் 6:29).

சாலொமோன் உடுத்துவதில் மகிமையாய் இருந்தான் என்று நாம் அறிகிறோம். அவனுடைய ஆடை அணிகலன்கள், அவனுடைய அலங்காரங்கள் எல்லாம் மகிமையாய் இருந்தது. அவன் அவ்வளவு மகிமையாய் உடுத்தியிருந்தாலுங்கூட, கர்த்தர் காட்டு புஷ்பங்களுக்கு உடுத்தியது போல அவனுல் உடுத்திக்கொள்ள முடியவில்லே. கர்த்தர் பெரியவராக இருந்து சகல காட்டுப் புஷ்பங்களேயும் உடுத்துவிக்கிருர். சகல பறவைகளேயும் போஷிக்கிருர். சகல ஆகாயத்துப் பட்சிகளேயும் போஷிக்கிருர். சகல மிருக ஜீவன்களுக்கும் உணவு அளிக்கிருர்.

ஒரு காட்டுப்புல் சாதாரணமானதுதான். இன்றைக்கிருந்து நாளேக்கு அடுப்பில் போடப்படக்கூடியதுதான். ஆனுலும் கர்த்தர் அதற்கு எவ்வளவு மகிமையை வைத்திருக்கிருர் என்று யோசித்துப் பாருங்கள். அது எப்படி முளேக்கிறது, எப்படி வளருகிறது, எப்படி பூக்கிறது, எப்படி பெருகுகிறது என்பதையெல்லாம் பார்க்கும்போது அதில் தேவனுடைய மகிமை நிறைந்திருக்கிறதைப் பார்க்கிறோம்.

அந்த தேவன் உன்னேடுகூட இருக்கிருர். நீ அவருடைய பிள்ளேயாக இருக்கிறபடியினுல் அவர் உன்னே உடுத்துவிப்பார். உன்னே போஷிப்பார். உன்னே வழி நடத்துவார். சாலொமோன் உடுத்தியிருந்த மகிமையான வஸ்திரங்களேயும் மேன்மையான வஸ்திரங்களேயும் கர்த்தர் உனக்கு வாக்குப் பண்ணியிருக்கிருர். பரிசுத்தவான்களின் நீதியாகிய மெல்லிய வஸ்திரங்களே நீ தரித்திருக்கிருய் (வெளி 19:8). இரட்சிப்பின் வஸ்திரங்களே உடுத்துவிக்கிருர். நீதியின் சால்வைகளே தரிப்பிக்கிருர் (ஏசாயா 61:1). நம்முடைய கர்த்தர் எவ்வளவு பெரிய

வர்; எவ்வளவு நல்லவர்; எவ்வளவாய் நம்மேல் அன்பும் இரக்கமும் கொண்டவர்!

கர்த்தர் பெரியவர் என்று அவரைப் பற்றிக்கொள்வாயா? அவருடைய ஆளுகையும், மகிமையும் பெரியது என்று அவரை மகிமைப்படுத்துவாயா? அவருடைய ஞானம் அளவிடப்படாதது என்று அவரை ஸ்தோத்தரிப்பாயா? உன்னை மகிமையாய் உடுத்துவிக்கிற தேவன் பெரியவர் என்று அவர் மேல் அன்பு செலுத்துவாயா?

கர்த்தர் பெரியவர்! பெரியவர்! அவர் சாலொமோனிலும் பெரியவர்! உலகத்தின் எந்த ராஜாவிலும் பெரியவர்! எந்த ஞானவானிலும் பெரியவர்! எந்த மகிமையிலும் பெரியவர்!

கர்த்தர் பெரியவர்! ஆமென், அல்லேலூயா!

அத்தியாயம் 4

ஆபிரகாமிலும் பெரியவர்!

"எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீர் பெரியவரோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை நீ எப்படிப்பட்டவனுக்குகிறுய் என்ருர்கள்"

(யோவான் 8:53).

நீ ஆபிரகாமிலும் பெரியவனே என்ற கேள்வி யூதரிடமிருந்து இயேசுவை நோக்கி ஒரு கூரிய அம்பைப் போல புறப்பட்டு வந்தது. கிறிஸ்துவை அவர்கள் அறியாதபடியினுலே அந்த கேள்வியை கேட்டார்கள்.

அதற்கு இயேசு கிறிஸ்து பதிலாக: "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாக இருந்தான்; கண்டு களிகூர்ந்தான்" என்ருர்.

அப்போது யூதர்கள் அவரை நோக்கி: "உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே. நீ ஆபிரகாமைக் கண்டாயோ?" என்ருர்கள்.

அதற்கு இயேசு, "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்ருர்

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆபிரகாம் பெரியவராக இருந்தார். அவர்தான் கோத்திரத்து முதல் முற்பிதா ஆபிரகாமிலிருந்துதான் ஆசீர்வதிக்கப்பட்ட எபிரெய சந்ததி ஆரம்பமாகிறது. ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம் என்ற வார்த்தைக்கு திரளான ஜாதிகளின் தகப்பன் என்றுதான் அர்த்தம். அவனிடமிருந்து கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜாதி தோன்றினது. அவனுடைய வம்சத்தில் ஏராளம் ராஜாக்கள் எழும்பினுர்கள்.

கர்த்தர் வேதத்திலே பல இடங்களிலே ஆபிரகாமோடு நேருக்கு நேராக பேசினார். என் சிநேகிதனாகிய ஆபிரகாம் என்று அழைத்தார் (ஏசாயா 41:8). என் தாசனாகிய ஆபிரகாம் என்று அழைத்தார் (சங் 107:42). மட்டுமல்ல, தான் சொன்ன சரித்திரத்தில் ஆபிரகாமின் மடியில் லாசரு அமர்ந்திருப்பதையும் தேவன் குறிப்பிடுகிறார்.

ஆபிரகாமை மேன்மைப்படுத்திய கர்த்தர் தம்மை ஆபிரகாமின் குமாரன் என்று அழைத்துக் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆபிரகாம் எல்லா விதத்திலும் பெரியவன் தான்.

ஆனால் கர்த்தர் ஆபிரகாமிலும் பெரியவர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

1. ஆபிரகாம் மரித்தார், இயேசு உயிரோடிருக்கிறார்:-

ஆபிரகாமை பெரியவர் என்று பாராட்டின யூதர்கள் ஆபிரகாமைக் குறித்து சொல்லும்போது ஆபிரகாம் மரித்தார். தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள் (யோவான் 8:53).

சகரியா தீர்க்கதரிசி, "உங்கள் பிதாக்கள் எங்கே? தீர்க்கதரிசிகள் என்றென்றும் உயிரோடிருப்பார்களோ?" என்று கேட்கிறார் (சகரியா 1:5).

ஆபிரகாம் பூமியில் நூற்று எழுபத்தைந்து வருடம் வாழ்ந்து அதன் பின்பு மரித்தார். அவருடைய கல்லறை மம்ரேக்கு எதிரே ஏத்தியனான சோகாரின் குமாரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட குகையிலே இருக்கிறது (ஆதி 25:9). இன்றைக்கும் அந்த கல்லறை மூடப்பட்ட வண்ணமாகவே கிடக்கிறது. மூடப்பட்ட அந்த கல்லறை சுற்றுலா பயணிகளுக்கு காட்சிப் பொருளாக அமைந்திருக்கிறது.

ஆனால் இயேசு ஆபிரகாமிலும் பெரியவர். அவர் மரித்தார். ஆனால் மரணமோ, பாதாளமோ அவரை அடக்கி

வைக்க முடியவில்லை. இயேசு உயிரோடு எழுந்தார். இன்றைக்கும் அவர் ஜீவிக்கிறார். பிதாவின் மடியிலே நமக்காக பரிந்து பேசிக் கொண்டேயிருக்கிறார். இயேசுவை அடக்கம் பண்ணிய கல்லறை இன்றைக்கும் திறந்த வண்ணமாக இருக்கிறது திறந்த அவருடைய கல்லறை இன்றைக்கு நமக்கு மகிழ்ச்சியின் அடையாளமாகவும் உயிர்த்தெழுதலின் வல்லமைக்கு அடையாளமாகவும் நமது நம்பிக்கையின் பிறப்பிடமாகவும் ஜெயஜோதியாய் விளங்குகிறது. இயேசு பெரியவர்!

நம் கர்த்தர் ஆபிரகாமிலும் பெரியவராய் இன்றைக்கும் உயிரோடு கூட இருக்கிறார். மரித்த தெய்வத்தையோ அல்லது மரித்த முற்பிதாவையோ நாம் தொழுதுகொள்ளாமல், உயிரோடிருக்கும் இரட்சகரான இயேசுவை நாம் சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும் தொழுதுகொள்கிறோம் யோபு பக்தன் "என் மீட்பர் உயிரோடிருக்கிறார்" என்று மார்தட்டி முழங்கினார் (யோபு 19:20).

அப்போஸ்தலனாகிய பவுல், "அவர் எப்போதும் உயிரோடிருக்கிறபடியினால் நம்மை முற்றுமுடிய பாதுகாக்க வல்லவராக இருக்கிறார்" என்று ஆனந்த பரவசமடைகிறார் (எபிரெயர் 7:25).

உயிர்த்தெழுந்த பெரியவராகிய இயேசு நம்மை உற்சாகப்படுத்தி, "பயப்படாதே, நான் முந்தினவரும், பிந்தினவரும் உயிருள்ளவருமாக இருக்கிறேன். மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று நம்மைத் தேற்றி வழிநடத்துகிறார்.

ஆபிரகாம் மரித்தார். தற்பொழுது இளைப்பாறிக்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு முற்பிதாக்களும் மரித்தார்கள். தற்பொழுது இளைப்பாறிக்கொண்டிருக்கிறார்கள். அன்று தானியேலிடம் தேவ தூதன் சொன்னான், "நீயோவென்றால் முடிவு வருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய்" என்றான் (தானி 12:13).

ஆனல் கர்த்தரோ பெரியவர். அவர் உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறார். அவர் ஆபிரகாமிலும் பெரியவராக இருந்து கடைசி நாளில் ஆபிரகாமையும் எழுப்புவார். ஆமென்! அல்லேலூயா!

2. ஆபிரகாமின் வருஷங்களும், கிறிஸ்துவின் வருஷங்களும்:-

யூதர்கள் இயேசுவைப் பார்த்து, "உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமை கண்டாயோ?" என்றார்கள். அதற்கு இயேசு, "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பாகவே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன்" என்றார்.

ஆபிரகாம் பூமியில் வாழ்ந்த மொத்த வருடங்கள் நூற்று எழுபத்தைந்து. இயேசு பூமியில் வாழ்ந்த மொத்த வருடங்கள் முப்பத்து மூன்றரை. யூதர்கள் இயேசுவிற்கு ஒரு வயது நிர்ணயித்தார்கள். ஏறக்குறைய ஐம்பது என்பது. நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்பது அவர்களுடைய கேள்வி. ஆபிரகாம் பூமியிலிருந்த வருடங்கள் கி.மு 1996- 1822. குறைந்த பட்சம் ஒருவன் இரண்டாயிரம் ஆண்டுகளாவது பூமியில் வாழ்ந்திருந்தால்தான் ஆபிரகாமின் நாட்களை கண்டிருக்க முடியும். ஆகவேதான் யூதர்கள் இயேசுவைப் பார்த்து, உனக்கு என்ன வயதாகிறது? நீ ஆபிரகாமைக் கண்டாயோ? என்று கேட்டார்கள். ஆனல் அவர்களுக்கு இயேசுகிறிஸ்து நித்தியமான தேவன் என்று தெரியாது. கிறிஸ்து உலகங்களையெல்லாம் சிருஷ்டித்தவர் என்று தெரியாது. அவர் பிதாவின் மடியில் செல்லப்பிள்ளையாக இருந்து தேவதூதர்களால் ஆராதிக்கப்பட்டவர் என்று தெரியாது. இயேசு ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்பாகவே இருக்கிறார்; நோவா உண்டாவதற்கு முன்பாகவே இருக்கிறார்; உலகங்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே இருக்கிறார். அல்லேலூயா!

அவர் பெரியவர். அவர் மேலானவர். யோவான் 3:21 சொல்கிறது: உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரி

லும் மேலானவர்; பூமியிலிருந்து உண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாக இருந்து பூமிக்கு அடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். ஆபிரகாம் பூமிக்குரியவர். ஆனால் இயேசுவோ உன்னதத்திலிருந்து வந்தபடியினால் பெரியவராக இருக்கிறார்.

இயேசுவைக் குறித்து வேதம் சொல்கிறது, "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:1,14).

இயேசு ஆபிரகாமுக்கு முன் இருந்தவர். அப்போஸ்தலனாகிய பவுல் இதைக் குறித்து எழுதும்போது, "இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய் தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்" (எபி 1:2,3).

இயேசுவே சிருஷ்டிப்புகளுக்கு ஆதியுமானவர். முந்தினவரும் பிந்தினவருமானவர். இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமானவர்.

தன்னைக் கேள்வி கேட்ட யூதரைப் பார்த்து: "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாய் இருந்தான்; கண்டு களிகூர்ந்தான்; ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பாகவே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவான் 8:56,58).

ஆபிரகாம் பிறந்ததும் இயேசுவுக்குத் தெரியும் ஆபிரகாம் வளர்ந்ததும் இயேசுவுக்குத் தெரியும். ஆபிரகாமின் ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு நினைவும் அவருக்குத் தெரியும். நம்முடைய தேவன் ஆபிரகாமிற்கு முன்னமே இருக்கிற தேவன். அவர் ஆதியும், அந்தமுமில்லாதவர். அவர் ஆபிரகாமிலும் பெரியவர்!

தேவனுடைய பிள்ளையே, ஆபிரகாமிலும் பெரியவர் உன்னுடைய கரத்தைப் பிடித்திருக்கிறார். ஆபிரகாமுடைய ஓட்டத்தை ஜெயமாய் ஓடி முடிக்கச்செய்த தேவன் உன்னுடைய ஓட்டத்தையும் ஜெயமாய் ஓடி முடிக்கச் செய்வார்.

இன்று நீ ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியிலே ஆவிக்குரிய இஸ்ரவேலனாக நின்றுகொண்டிருக்கிறாய். நீ ஆபிரகாமிலும் பெரியவராகிய கிறிஸ்துவால் வழிநடத்தப்படுகிறாய் என்பதை மறந்துபோகாதே. அவர் மரணபரியந்தமும் நம்மை நடத்த வல்லவராய் இருக்கிறார்.

இந்த தேவன் பெரியவராக நம்மோடு நடந்து வருவது நமக்கு எத்தனை பெரிய பாக்கியம்! நாம் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் நம்பி நடக்காமல் அவர்களின் பிதாவாகிய கர்த்தரின் கரத்தைப் பற்றி நடக்கிறோம். நம் தேவன் ஜீவனுள்ளவர். ஆகவே, ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும் நாம் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்போம்.

அன்றைக்கு ஆபிரகாமுக்கு கர்த்தர் கானானை வாக்களித்தார். ஆனால் ஆபிரகாமிலும் பெரிய கிறிஸ்து நமக்கு பரம கானானை வாக்களித்திருக்கிறார். மட்டுமல்ல, எபி 11:40-ன்படி ஆபிரகாம் நம்மையல்லாமல் பூரணராகாதபடி விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்.

நம்முடைய தேவன் பெரியவர், நல்லவர், துதிக்கப்படத்தக்கவர். அவருக்கே சகல கனத்தையும், மகிமையையும் செலுத்துவோமாக. கர்த்தர் பெரியவர்!

அத்தியாயம் 5

யாக்கோபிலும் பெரியவர்!

"இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ?" *(யோவான் 4:12).*

"நீர் பெரியவரோ?" என்று சமாரிய ஸ்திரீ இயேசுவை பார்த்துக் கேள்வி கேட்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நீர் யாக்கோபைப்பார்க்கிலும் பெரியவரோ? எங்களுடைய முற்பிதாக்களைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ?

சமாரிய ஸ்திரீ இயேசுவைப் பார்த்து அப்படிப்பட்ட ஒரு கேள்வியை தைரியமாய் கேட்டுவிட்டாள். ஒருவேளை அன்று இயேசுவிற்கு அது அதிர்ச்சியாய் இருந்திருக்கும். இப்படி ஒரு பெண் தன்னிடம் கேள்வி கேட்டுவிட்டாளே என்று அவர் எண்ணியிருந்திருப்பார்!

சமாரியர்கள் யாக்கோபை மிகவும் முக்கியப்படுத்தினார்கள். அந்த சமாரிய ஸ்திரீ தண்ணீர் எடுத்த கிணறு யாக்கோபால் வெட்டப்பட்ட கிணறு. எத்தனையோ நூறு ஆண்டுகள் கடந்துசென்றாலும்கூட, அந்த கிணறு தூர்ந்து விடவில்லை; தண்ணீர் வற்றிவிடவில்லை. அந்த தண்ணீர் சமாரியர்களுக்கும் அவர்களுடைய மிருக ஜீவன்களுக்கும் தாகம் தீர்க்கிறதாக இருந்துவந்தது. அந்த கிணற்றை அவர்கள் பார்க்கும்போதெல்லாம் யாக்கோபை நினைவு கூர்ந்தார்கள். நன்றியுள்ள இருதயத்தினால் யாக்கோபை பெரியவராய் போற்றினார்கள்.

யாக்கோபு என்ற பெயருக்கு, "தட்டி வீழ்த்துபவன் அல்லது எத்தன்" என்று அர்த்தம். அவன் தேவனோடுகூட போராடி மேற்கொண்டு பெரியவனானான். யாக்கோபுக்கு கர்த்தர் 'தேவ பிரபு' என்று அர்த்தங்கொள்ளும் இஸ்ரவேல் என்னும் வல்லமையான புது நாமத்தைச் சூட்டினார்.

யாக்கோபுக்கிருந்த எல்லா குறைபாடுகளின் மத்தியி லும் அவன் கர்த்தரை அளவில்லாமல் நேசித்தான்; கர்த் தரோடு பொருத்தனை செய்துகொண்டான். ஆகவே, கர்த்தர் யாக்கோபின் தேவன் என்று தம்மை அழைத்துக் கொள்ள வெட்கப்படவில்லை!

யாக்கோபு பெரியவர்தான். கர்த்தர் எப்போதும் யாக்கோபுக்கு துணை நின்றார். ''என் தாசனாகிய இஸ்ர வேலே, நான் தெரிந்துகொண்ட யாக்கோபே'' என்று அவர் மிகவும் அன்போடுகூட அழைத்தார் (ஏசாயா *41:8*). ''யாக்கோபு என்னும் சிறு பூச்சியே, இஸ்ர வேலின் சிறு கூட்டமே, பயப்படாதே. நான் உனக்கு துணை நிற்கிறேன்'' என்று சொல்லி தேற்றினார்

(ஏசாயா 41:14).

வேதத்தில் கர்த்தர் யாக்கோபை அன்போடுகூட அழைக்கும் ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நமக்குரியது. யாக்கோபின் சுதந்தரத்தில் நமக்குப் பங்குண்டு. ஏசாயா *43:1*ஐ வாசித்துப் பாருங்கள். ''இப்போதும் யாக்கோபே உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே உன்னை உருவாக் கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப் படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்''

''என் தாசனாகிய யாக்கோபே நான் தெரிந்து கொண்ட இஸ்ரவேலே, கேள். உன்னை உண்டாக்கின வரும், உனக்குத் துணை செய்கிறவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட யெஷூரனே, பயப்படாதே''

(ஏசாயா 44:1,2).

''யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை; நீ என் தாசன்; நான் உன்னை உருவாக்கினேன். நீ என் தாசன் இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை''

(ஏசாயா 44:21)

யாக்கோபு ஆண்டவரைத் தேடினபடியினுல் ஆண்டவர் அவரைப் பெரியவராக்கினுர். பெரிய வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். பெரிய பெரிய உடன்படிக்கைகளோடுகூட யாக்கோபை உயர்த்தினுர். அற்பமான முறையில் வாழ்க்கையை ஆரம்பித்த யாக்கோபு, மகிமையான முறையில் தன்னுடைய வாழ்க்கையை முடித்தார். வேதத்தில் யாக்கோபுக்குப் பெரிய இடமுண்டு. யாக்கோபு பெரியவர் தான்.

ஆனுல் கர்த்தர் யாக்கோபைவிட பெரியவர் என்பதை மறந்துவிடக்கூடாது. யாக்கோபு அன்றைக்கு அந்த சமாரியருக்குக் கொடுத்ததெல்லாம் ஒரு கிணறுதான். அந்த கிணற்றில் அவர்களும் அவர்களுடைய மிருக ஜீவன்களும் தாகம் தீர்த்துக்கொண்டார்கள். அந்த நேரத்தில் கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை யோசித்துப் பாருங்கள். இயேசு சொன்னுர், "இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்ருய் இருக்கும் என்ருர்" (யோவான் 4:14).

சமாரிய ஸ்திரீயிடம் இயேசு சொன்னுர், நீ யாக்கோபு பெரியவர் என்கிருய். ஆனுல், அவர் கொடுத்த தண்ணீரைக் குடித்தால் மீண்டும் தாகம்தான் உண்டாகிறது. ஆனுல் நானே பெரியவராக இருந்து தாகம் ஏற்படாத ஜீவத்தண்ணீரைக் கொடுக்க வல்லமையுள்ளவராக இருக்கிறேன் என்ருர் (யோவான் 4:14). இயேசு தருகிற தண்ணீர் நமக்குள்ளே நித்திய ஜீவ காலமாக ஊறுகிற இரட்சிப்பின் நீரூற்ருய் இருக்கிறது

நீங்கள் இரட்சிப்பின் ஊற்றிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீரை மொண்டுகொள்வீர்கள் (ஏசாயா 12:3). இரட்சிப்பின் தண்ணீர் தாகத்தை ஏற்படுத்துவதில்லை.

இந்த இரட்சிப்பின் தண்ணீரைப் பற்றி தாவீது ராஜா சொல்கிறார்: "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்" என்று (சங் 116:14). இரட்சிப்பின் ஊற்றிலிருந்து தண்ணீரை மொண்டுகொள்ள இரட்சிப்பின் பாத்திரமிருக்கிறது.

ஒரு கிணற்றைக் கொடுத்தவுடன் யாக்கோபு பெரியவராகி விட்டார். இன்றைக்கும் அநேகர், யாராவது அவர்களுக்கு உதவி செய்துவிட்டால் அவர்களையே தெய்வமாக்கி விடுகிறார்கள். கர்த்தர் கொடுக்கிற பெரிய ஈவுகளையும் கிருபைகளையும் எண்ணாமல் தங்களுக்கு உதவி செய்கிறவர்களையே பின்பற்றுகிறார்கள். யாக்கோபிலும் பெரியவர் உன்னோடுகூட இருக்கிறார் என்பதை யோசித்துப்பார்.

அரசாங்கம் சில உதவிகளைச் செய்கிறது என்பதற்காக அநேகர் இந்துக்களாக மாறுகிறார்கள். இன்னும் சிலர், வெளிநாட்டிலிருந்து பணம் கிடைக்கிறதென்றால் சத்தியத்தையே விலை பேசுகிறார்கள். இரண்டு மனைவிகளை வைத்திருந்த ஒருவரை எனக்குத் தெரியும். அவருடைய வாழ்க்கை முன்மாதிரியற்ற ஒரு வாழ்க்கை. அவரிடத்திலிருந்து நன்கொடை வசூலிப்பதற்காக ஒரு திருச்சபையினர் போய் அவரைப் புகழ்ந்து பேசிக்கொண்டேயிருந்தார்கள். அவர்தான் ஓய்வு நாள் பாடசாலைக்கு வந்து பிள்ளைகளுக்குப் பரிசளிக்க வேண்டுமென்றும் ஆலயத்தில் பெரிய பொறுப்பு வகிக்க வேண்டுமென்றும் வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். இது எத்தனை வேதனையான ஒரு காரியம்! கிணற்றை முக்கியப்படுத்துகிறார்கள் கிணற்றைக் கொடுத்த யாக்கோபை முக்கியப்படுத்துகிறார்கள். ஆனால், கர்த்தரையோ மறந்துவிடுகிறார்கள்.

யாக்கோபு கொடுத்தது ஒரு கிணறுதான். ஆனால் கர்த்தரோ பாவ மன்னிப்பைக் கொடுக்கிறார். சமாதானத்தைக் கொடுக்கிறார். ஆவியின் வரங்களை, வல்லமையைக் கொடுக்கிறார். அசுத்த ஆவிகளின்மேல் வல்லமையைத்

தருகிறார். மட்டுமல்ல, பரலோக பாக்கியத்தையும் தரு கிறார். இவ்வளவு கிருபைகளைத் தருகிற கர்த்தரை அற்ப மாய் எண்ணி அற்ப பணத்திற்காக ஒருபோதும் உல கத்தாரை மேன்மைப்படுத்தாதேயுங்கள். யாக்கோபிலும் பெரியவர் உங்களோடுகூட இருக்கிறார். யாக்கோபு உங் களுக்குக் கொடுக்கிறதைப்பார்க்கிலும் கோடி கோடி மடங்கு அதிகமாக கர்த்தர் உங்களுக்குத் தர வல்லவர். ஆகவே கர்த்தரையே பிரியப்படுத்துவீர்களாக.

கர்த்தர் யாக்கோபிலும் பெரியவர். யாக்கோபின் வாழ்க்கையெல்லாம் ஏற்றத் தாழ்வுகளாக இருந்தது. பின்பற்றக்கூடாத சில ஏமாற்று வாழ்க்கையின் மூலமாக வும் யாக்கோபு கடந்து சென்று, தன்னுடைய சொந்த சகோதரனை ஏமாற்றினான், சொந்த தகப்பனை ஏமாற்றி னான், மாமனாரை ஏமாற்றினான். ஆனால் கிறிஸ்துவின் வாழ்க்கையை நோக்கிப் பாருங்கள். அவர் தம்முடைய டைய பிதாவின் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராக இருந்தார். வேதம் சொல்கிறது, அவர் கொடுமை செய்ய வில்லை, அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை (ஏசாயா 53:9). யாக்கோபைப் பார்க்கிலும் அவர் பெரிய வர்! காரணம், அவர் முழுக்க முழுக்க பரிசுத்தராக இருந் தார்.

தேவபிள்ளையே, நீ யாக்கோபையோ அல்லது வேறு எந்த மனுஷரையோ பின்பற்றாமல் கர்த்தரையே பின் பற்றுவாயாக.

யாக்கோபிலும் பெரியவர் நம் மத்தியில் இருக்கிறார். அல்லேலூயா! அவர் பெரியவர்! அவர் உன் நடுவில் பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராய் இருக்கிறார்.

''சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி, இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவ ராய் இருக்கிறார்'' (ஏசாயா 12:6).

யாக்கோபின் தேவன்:-

யாக்கோபையல்ல; யாக்கோபிலும் பெரியவரான யாக்கோபின் தேவனையே தொழுதுகொள். அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக!

நம் தேவன் யாக்கோபின் தேவன். யாக்கோபின் தாழ்விலே அவரைக் கண்டெடுத்து உயர்த்தினவர், யாக்கோபுக்கு அடைக்கலமாயிருந்து பாதுகாத்தவர், உன்னை பாதுகாக்க உன் அருகில் நிற்கிறார். "யாக்கோபின் தேவனுடைய நாமம் உனக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக" *(சங் 20:1).*

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் *(சங் 46:11).*

யாக்கோபின் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன் *(சங் 75:9).* நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி, யாக்கோபின் தேவனைக் குறித்து ஆர்ப்பரியுங்கள் *(சங் 81:1).* பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு *(சங் 114:7).*

தாவீது யாக்கோபைப் பெரியவராகக் கண்டாலும் யாக்கோபின் தேவனை ஆண்டவராகவும், மகா பெரியவராகவும் கண்டு போற்றிப் புகழ்கிறதைப் பாருங்கள். தாவீது சொல்கிறார், "யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்" *(சங் 146:5).*

யாக்கோபின் தேவன் நம்முடையவர்; நமக்கு அடைக்கலமானவர்; நம்மை உயர்த்துகிறவர். அவர் பெரியவர். ஆமென்; அல்லேலூயா!

தேவாலயத்திலும் பெரியவர்!

''தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத் 12:6).

கர்த்தர் பெரியவர். அவர் யோனாவிலும் பெரியவர். ஆபிரகாமிலும் பெரியவர். சாலொமோனிலும்பெரியவர். யாக்கோபிலும் பெரியவர். மட்டுமல்ல, அவர் தேவ ஆலயத்திலும் பெரியவர்.

சாலொமோன் கர்த்தருக்கென்று ஒரு மகிமையான ஆலயத்தைக் கட்ட நினைத்தபோது, ''எங்கள் தேவன் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் ஆகையால் நான் கட்டப்போகும் ஆலயம் பெரியதாக இருக்கும்'' (II நாளா 2:5) என்றான்.

வானாதி வானமும் கொள்ளக்கூடாத சர்வவல்லமையுள்ள ஒரு ஆண்டவருக்குத் தன்னால் முடிந்த அளவு மிகப் பெரியதாக, மிகுந்த மகிமையுடையதாக, மிகுந்த அலங்காரமும் மகத்துவமுடையதாக, ஆலயத்தை சாலொமோன் கட்டி முடித்தான்.

இன்றைக்கு நமக்கு திரும்பிய இடமெல்லாம் ஆலயமிருக்கிறதைப்போல அன்றைக்கு இஸ்ரவேலருக்கு அப்படி இருந்ததில்லை. முழு இஸ்ரவேலுக்கும் ஒரே ஒரு ஆலயம்தான் எருசலேமில் உண்டு. இஸ்ரவேல் தேசத்தின் எந்தப் பகுதியில் ஜனங்கள் வாழ்ந்துகொண்டிருந்தாலும், அவர்கள் எருசலேமிலுள்ள தேவ ஆலயத்தை நோக்கி நாடி வருவார்கள். பண்டிகை நாட்களிலெல்லாம் எருசலேம் நிரம்பி வழியும்படிக்கு அவ்வளவு அதிகமான கூட்டம் அங்கே இருக்கும்.

நாட்கள் செல்லச் செல்ல ஜனங்கள் ஆலயத்தை மேன்மைப்படுத்தினார்களே தவிர, கர்த்தரை மேன்மைப்படுத்

வில்லை ஆலயத்தை அலங்கார பொருளாக்கி முடிவில் விக்கிரகமாக்கி விட்டார்கள். ஆலயத்திலே கொள்விளையும், கொடுப்பிளையும் ஆரம்பித்தது. புறா விற்கிறவர்களும் காசுக்காரர்களும் வந்து அமர்ந்தார்கள். முடிவில் ஜெப வீடாய் இருந்த அந்த ஆலயம் கள்ளர் குகையாக மாறி விட்டது ஆலயத்திலும் பெரியவர் புறக்கணிக்கப்பட்டு ஆலயமோ சீர்கெட்டுப் போனது

இன்றைக்கும் அநேகர் தங்களுடைய ஆலயங்களை, சபைப் பிரிவுகளை மிகைப்படுத்துகிறார்களேதவிர, கர்த்தரை உயர்த்துவதில்லை தங்கள் ஊழியங்கள், தங்கள் ஜெபக்குழுக்கள் என்பதுதான் அவர்களுக்கு முக்கியம். ஆனால் கர்த்தரைப் பற்றி பேசுகிறதற்கு அவர்களுக்கு விருப்பமும் இல்லை; நேரமுமில்லை. தேவபிள்ளையே, நீ உன் சபைக்காக பக்திவைராக்கியம் பாராட்டுவதைப்பார்க்கிலும் உனக்காக ஜீவனைக் கொடுத்த ஆண்டவருக்காக பக்தி வைராக்கியம் பாராட்டுவதே மேல்! இன்றைக்கு அநேக ஆலயங்கள் உடைந்து கிடக்கின்றன. விசுவாசிகளுக்குள் பிரிவினை ஏற்பட்டிருக்கிறது கோர்ட் என்றும் வழக்கு என்றும் நியாயஸ்தலங்களுக்கு ஊழியர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இது எத்தனை பரிதாபம்!

ஆலயம் ஒரு மனுஷனைப் பரிசுத்தமாக்குவதில்லை. பலிபீடம் பரிசுத்தமாக்குவதில்லை. கர்த்தரே பரிசுத்தமாக்குகிறவர். கர்த்தரே உனக்காக இரத்தம் சிந்தி உன்னைச் சுத்திகரிக்கிறவர். தேவ ஆலயத்திலும் பெரியவர் உன்னோடுகூட இருக்கிறார் என்பதை மறந்துபோகாதே!

ஒரு வேடிக்கையான கதை உண்டு. வெள்ளைக்காரர்கள் ஆராதிக்கிற ஒரு சபையில் ஒரு நீக்ரோவும் பங்கு பெற்று தேவனை ஆராதிக்க விரும்பினான். ஆனால் வெள்ளைக்காரர்களோ அவனைச் சேர்த்துக்கொள்ள விருப்பப்படவில்லை நீக்ரோவின் நிறமும், அவனுடைய குறைவான சமுதாய வாழ்வும், ஏழ்மையும் அந்த ஆலயத்தில் சேரவிடாதபடி அவனைத் தடுத்தது. பலமுறை அந்த

ஆலயத்தில் வந்து தன்னை அங்கத்தினராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று போதகரிடம் கேட்டும் அவர் மறுத்து விட்டார். இது உயர்ந்த கல்விமான்களின் ஆலயம் பெரும் செல்வந்தர்கள் இங்கே வருகிறார்கள். இப்படிப் பட்ட இடத்தில் நீ வருவாயென்றால் மற்றவர்களின் கௌரவம் குறைந்து போய்விடும் என்று பேசினார்.

ஆனால் இந்த நீக்ரோவோ தேவ அன்பினால் நிறைந்த வன். ஐயா, தேவனுடைய பிள்ளைகளோடுகூட ஐக்கியங் கொள்ள விருப்பப்படுகிறேன். உங்களோடுகூட சேர்ந்து ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள விரும்புகிறேன் என்றான். ஆனால் போதகரோ அனுமதிப்ப தாக இல்லை. ''இந்தப் பட்டணத்தில் எவ்வளவு ஆலயங் கள் இருக்கிறது! உனக்கு உன் ஆண்டவர் எங்களுடைய ஆலயத்தைத்தான் வெளிப்படுத்தினாரா? வேறு ஆலயத்தில் சேரக்கூடாதா?'' என்று சொல்லித் துரத்தினார்.

ஆனால் அந்த நீக்ரோ விடாப்பிடியாக, ஆலயத்தின் வெளியில் உள்ள படிக்கட்டில் உட்கார்ந்து ஆலயத்தின் ஆராதனையில் கலந்துகொண்டு கர்த்தரை ஆராதித்து, துதித்துக்கொண்டிருந்தான். அந்த நீக்ரோவின் அருகில் ஒரு பெரியவர் வந்து உட்கார்ந்தார். அவர் அந்த நீக் ரோவை அன்போடுகூட பார்த்து, ''மகனே, நீ கவலைப் படாதே; நானும் உள்ளே செல்ல வேண்டுமென்று இந்த ஆலயம் கட்டின நாள் முதற்கொண்டு ஆவலோடு காத் திருக்கிறேன். என்னை அவர்கள் உள்ளே விடவில்லை. நீயும் உள்ளே செல்ல முடியாமல் வெளியே இருக்கிறாய். ஆகவே நாம் இருவரும் வெளியே இருந்துகொண்டே கர்த்தரை ஆராதிப்போம்'' என்றார். நீக்ரோவிற்கு ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. அவரைப் பார்த்து, ''ஐயா நீங்கள் யார்?'' என்று கேட்டார். அதற்கு அவர், ''இந்த ஆலயத்திலும் பெரியவராகிய இயேசு கிறிஸ்து நான்தான் அவர்கள் என்னையே உள்ளே அனுமதிக்காமல் இருந்தா

எப்படி உன்னை அனுமதிப்பார்கள்?'' என்றார். அந்த வார்த்தை நீக்ரோ பக்தனைத் தேற்றியது.

இன்று பல ஆலயங்களில் ஜாதிப் பெருமையும், குலப் பெருமையும், பணப்பெருமையும் இயங்கி கர்த்தரை வெளியே நிறுத்தி விடுகிறது. இன்னும் சில ஆலயங்களில் டீக்கன்மார், சபை செயலாளர் தேர்தலில் சபை பாழாகி கிறிஸ்து வெளியே ஓட்டமாய் ஓடி விடுகிறார். தேவ ஆலயத்திலும் பெரியவரை விட்டுவிட்டு பதவியைப் பெரிதாக எண்ணி போட்டி போட்டுக்கொண்டிருப்பது எத்தனை வேதனையான ஒரு காரியம்! தேவபிள்ளையே, ஆலயத்திலும் பெரியவரை உனக்கு சொந்தமாக்கிக்கொள்.

அன்றைக்கு இஸ்ரவேலர் தேவாலயத்தை விக்கிரகமாக்கினபடியினால், கர்த்தர் பாபிலோன் தேசத்து ராஜாவான நேபுகாத்நேச்சாரை எழுப்பினார். அவன் பாபிலோன் தேசத்திலிருந்து புறப்பட்டு படையெடுத்து வந்து ஆலயத்தை இடித்து தேவ ஆலயத்திலுள்ள பணிமுட்டுகள் அத்தனையையும் வாரிக்கொண்டு தன் தேசத்திற்கு போனான். மகிமை பொருந்திய ஆலயம் மண்மேடாய்ப் போனது.

தேவபிள்ளையே, ஆலயத்திலும் பெரியவர் கைகளினால் கட்டப்பட்ட தேவ ஆலயத்தில் வாசம் செய்கிறதில்லை என்பதை அறிந்துகொள்.

ஸ்தேவான் அதைத் திட்டமாக இஸ்ரவேலருக்கு உணர்த்துகிற விதத்தில் ''உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாக இரார். வானம் எனக்கு சிங்காசனமும் பூமி எனக்கு பாதபடியாக இருக்கிறது. எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்; நான் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எது; இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார் என்று தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே'' (அப் 7:48-50).

தேவ ஆலயத்திலும் பெரியவர் வாசம் செய்ய விரும்பும் வாசஸ்தலம் ஒன்றுண்டு. அதுவே, நம்முடைய சரீரம், நம்முடைய ஆவி.

I கொரி 3:16 சொல்கிறது, ''நீங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாக இருக்கிறார் என்றும் அறியீர்களா? தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாக இருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.''

I கொரி 6:15, 19 சொல்கிறது, ''உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்று அறியீர்களா? அப்படியிருக்க நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?''

II கொரி 6:16 சொல்கிறது, ''தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.''

அருமையான தேவனுடைய ஜனமே, மனுஷர் மத்தியிலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது என்று வேதம் சொல்கிறது. அந்த வாசஸ்தலத்தை நீ உன்னில் ஸ்தாபித்தால், நீ இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது உன்னுடைய சரீரத்தை ஆலயமாக்கும்படி கர்த்தர் அங்கு வருகிறார். நீ பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தைப் பெறும்போது பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலிருந்து உன்மேல் வருகிறார். தேவ அன்பு உன்னுடைய இருதயத்தில் ஊற்றப்படுகிறது. அந்த அன்பு உன்னை ஊழி

யத்தில் நெருக்கி ஏவுகிறது. அந்த ஆவியானவர் உன்னை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். ஆ! அது எத்தனை பெரிய அன்பு! நீ ஆலயத்தை மேன்மைப்படுத்துவதைப்பார்க்கிலும் உன்னுடைய உள்ளமாகிய வாசஸ்தலத்தைப் பரிசுத்தப்படுத்துவாயாக. உனக்குள்ளே தங்குகிற தேவனை பிரியப்படுத்தி எப்போதும் தேவ அன்பினால் நிரம்பியிருப்பாயாக.

தேவ ஆலயத்திலும் பெரியவர் உன்னோடுகூட இருக்கிறார். அன்றைக்கு சாலொமோன் கட்டிய தேவ ஆலயத்தை தமும்டைய மகிமையினால் நிரப்பினவர் உன்னுடைய உள்ளத்தைப் பரலோக ஐசுவரியத்தால் நிரப்ப வல்லமையுள்ளவர்.

உன்னுடைய உள்ளமாகிய ஆலயத்திலிருந்து தேவனை நோக்கி ஜெபம் எப்போதும் ஏறெடுக்கப்பட்டுக்கொண்டேயிருக்கட்டும். உன் உள்ளத்திலிருந்து தேவ அன்பு எப்போதும் பொங்கிக்கொண்டேயிருக்கட்டும். உன்னுடைய உள்ளம் எப்போதும் கல்வாரி நேசத்தால் நிரம்பியிருக்கட்டும். உன் உள்ளம் கர்த்தருக்கு ஆராதனை செய்யட்டும். அப்போது பரலோக தேவன் உன் உள்ளத்தை தேவ சமாதானத்தாலும் தேவ சந்தோஷத்தினாலும் தேவ கிருபையினாலும் நிரம்பி வழியச் செய்வார்.

ஆலயத்தில் பலிடபீமுண்டு. அந்த பலிபீடத்தில் பாவமன்னிப்பிற்காக செலுத்தப்படுகிற ஆட்டுக்குட்டி உண்டு. ஆனால் கிறிஸ்துவோ நமது தேவாட்டுக்குட்டியாக இருந்து நமக்குள்ளேதானே அவர் கிருபாதாரபலியாக, நம்மைச்சுத்திகரிக்கிறவராக இருக்கிறார். அவர் இரங்கி நமக்கு மன்னிக்கிறார்.

பழைய ஏற்பாட்டிலிருந்த பலிகளின்மேல் கர்த்தர் இன்று பிரியப்படுகிறதில்லை. பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்று கர்த்தர் சொல்கிறார். சடங்காச்சாரங்களையல்ல, ஆவியோடும் உண்மையோடும்

ஆராதிக்கிற ஆராதனையையே அவர் பிரியப்படுகிறார். அவர் மனதிரங்கி மன்னிக்கிறார், மனதிரங்கி நன்மை செய்கிறார்.

கர்த்தர் ஓசியா தீர்க்கதரிசி மூலமாக "பலியை அல்ல, இரக்கத்தையும், தகன பலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்" (ஓசியா 6:6) என்றார்.

நம்முடைய இருதயமாகிய ஆலயத்தை தேவனுக்குக் கொடுத்து நாம் அவருடைய இரக்கத்தை பெற்றுக்கொள்வோமாக. அவரை அறிகிற அறிவிலே வளருவோமாக. தேவ ஆலயத்திலும் பெரியவர் நம்மோடுகூட இருக்கிறார்.

அவர் தேவ ஆலயத்திலும் மட்டுமல்ல, எல்லா தேவர்களிலும் பெரியவர்! இன்று தேவர்கள் என்று அழைக்கப்படுவதெல்லாம் விழுந்துபோன லூசிஃபர்களின் ஆவிதான். தேவ மகிமையைக் காத்துக்கொள்ள முடியாமல் மேட்டிமையடைந்த தேவ தூதர்கள்தான். ஆங்காங்கே அவர்கள் விழுந்து, ஆராதனை தேவன் பக்கம் செல்லவிடாமல் தடுத்து ஜனங்கள் தங்களையே ஆராதிக்கும்படித் திசைதிருப்புகின்றனர்.

இன்றைக்கு அநேக பெரியவர்கள் தங்களையே தேவனுக்குகிறார்கள். சன்மார்க்க நெறியை போதிக்கிறவர்கள் தங்களையே தேவன் என்று அழைக்கிறார்கள். மனிதன் என்பவன் தேவனாகலாமென்று பாடுகிறார்கள். குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என தவறாக ஒப்பிடுகிறார்கள். இல்லவேயில்லை! ஒரு மனிதன் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் அவனால் ஒரு அணுவைக்கூட சிருஷ்டிக்க முடியாது. நற்கிரியைகளைச் செய்கிறவன் தேவனல்ல. வெறும் அற்புதங்களை மாத்திரம் செய்துகொண்டிருக்கிறவர்களை தெய்வம் என்று எண்ணாதீர்கள். சன்மார்க்க நெறியைப் போதிக்கிறான் என்றால் அவன் தெய்வமாகிவிடமாட்டான். வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனே கர்த்தர். அவர் எல்லா தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர்.

தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசிக்கும் போது நேபுகாத்நேச்சார் தன்னை பெரியவனாக காண்பித்தான் என்பதைக் காணலாம். நான் பெரியவன் என்ற மேட்டிமையான எண்ணம் அவனுடைய உள்ளத்தில் வந்தது. ஒரு நாள் அவன் அரண்மனையின்மேல் உலாவிக் கொண்டிருக்கும்போது பாபிலோன் பட்டணத்தின் மேன்மையையெல்லாம் பார்த்து, "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமையின் பிரஸ்தாபத்திற்கென்று ராஜ்யத்திற்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?" என்று சொன்னான்.

அவனைப்பார்க்கிலும் கோடி கோடி மடங்கு பெரியவரான கர்த்தர், அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். வேதம் சொல்கிறது, "நேபுகாத்நேச்சாரின் வார்த்தை அவன் வாயிலிருக்கும்போதே வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்ய பாரம் உன்னைவிட்டு நீக்கிப்போயிற்று. மனுஷரிலிருந்து தள்ளப்படுவாய். வெளியின் மிருகங்களோடு சஞ்சரிப்பாய் மாடுகளைப்போல் புல் மேய்வாய். இப்படி உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமாக இருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும் என்று உனக்கு சொல்லப்படுகிறது என்று விளம்பிற்று" (தானி 4:32). இது எத்தனை வேதனையான நியாயத்தீர்ப்பு கவனித்தீர்களா?

கர்த்தருக்கு முன்பாக நீ ஒருபோதும் உன்னைப் பெரியவனாக உயர்த்தாதே. மன மேட்டிமைக்கு இடங்கொடுக்காதே. கர்த்தர் உன்னை உயர்த்தும்படிக்கு நீ அவருக்கு முன்பாக தாழ்மையாய் ஜீவிக்க கற்றுக்கொள், கர்த்தருடைய காருணியமே உன்னைப் பெரியவனாக்கும் (சங் 18:35).

இஸ்ரவேலின் தேவன் பெரியவராய் உன் மத்தியில் இருக்கிறார். அவர் பெரியவர் என்று போற்றுவாயாக! மோசே ஆண்டவரைத் துதித்துப் போற்றும்போது,

''கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது முகத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர். வானத்திலும் பூமியிலும் உமது கிரியைகளுக்கும், உமக்கு ஒப்பாகவும் செய்யத்தக்க வன் யார்'' என்று புகழ்ந்து போற்றுகிறதைப் பார்க் கிறோம்.

தாவீது ராஜா சொல்கிறார், ''கர்த்தரே மகா தேவ னும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார்'' *(சங் 85:4)* ''கர்த்தர் பெரியவர் என்றும், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன். வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களி லும் எல்லா ஆழங்களிலும் கர்த்தர் தமக்குச் சித்தமானதை யெல்லாம் செய்கிறார்'' *(சங் 135:5).*

நம்முடைய கர்த்தர் பெரியவர். அவர் தேவ ஆலயத் திலும் பெரியவர். நம்முடைய உள்ளத்தில் பெரியவராக அவர் வீற்றிருக்கிறார். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாக இருக்கிறார். அவருடைய மகத் துவம் ஆராய்ந்து முடியாது *(சங் 143:3).*

கர்த்தர் பெரியவர்! ஆமென், அல்லேலூயா!

நம்மில் இருப்பவர் பெரியவர்!

''உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருப்பவர் பெரியவர்'' (I யோவான் 4:4).

எத்தனை அருமையான வாக்குத்தத்தம் இது! நம்மை எவ்வளவாக இந்த வசனம் ஆறுதற்படுத்தி உற்சாகப்படுத்துகிறது! நம்மில் இருப்பவரும், நம்மோடு இருப்பவரும் பெரியவர்!

அன்று எலிசா இருந்த சிறிய பட்டணத்தைச் சுற்றிலும் பகை அரசனின் படைகளும், இரதங்களும், குதிரைகளும் வந்து வளைந்து கொண்டது! அதைக் கண்ட எலிசாவின் வேலைக்காரன் பதறினான். ''ஐயோ, ஆண்டவனே, என்ன செய்வோம்?'' என்று கலங்கினான்.

அதற்கு எலிசா சொன்ன பதில் என்ன தெரியுமா? ''பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருப்பவர்கள் அதிகம்'' (II இராஜா 6:17).

''நம்மில் இருக்கிறவர் பெரியவர்'' என்று யோவான் சொன்னார். எலியா இன்னும் ஒரு காரியத்தைச் சொல்லி நம்மை உற்சாகப்படுத்துகிறார். ''ஆம், நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்'' அல்லேலூயா!

எலிசாவின் வேலைக்காரன் அதை நம்ப தயங்கினபடியால், எலிசா விண்ணப்பம் பண்ணி, கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்.

''உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார். இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும், இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்'' (II இரா 6:17).

தேவபிள்ளையே, உன் வாயில் எப்பொழுதும் இந்த விசுவாச அறிக்கை இருக்கட்டும் "எனக்குள் இருப்பவர் பெரியவர்; என்னோடிருப்பவர்கள் அதிகம்" அல்லேலூயா!

ஒரு ஏழை விசுவாச சகோதரியின் வீட்டுக்கு எதிரில் ஒரு மந்திரவாதி குடி வந்தான். அந்த மந்திரவாதிக்கு அந்த விசுவாசியின் ஜெபமும் பாடல்களும் எரிச்சலை உண்டாக்கிற்று. எனவே, அவன் அந்த விசுவாசிக்கு விரோதமாக மந்திரம் செய்து, அந்த விசுவாசியை ஊரை விட்டு துரத்த தீர்மானித்தான்.

அடுத்த நாள் அந்த விசுவாச சகோதரி ஜெபித்துக் கொண்டிருக்கும்போது மந்திரவாதியால் ஏவப்பட்ட குட்டிப் பிசாசு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தது. அந்த சகோதரி ஜெபித்துக்கொண்டிருப்பதைக் கண்டது. உள்ளே பிரவேசிக்க முடியாததாய் திரும்பிச் சென்றுவிட்டது! இப்படி பல ஆவிகளை அந்த மந்திரவாதி அனுப்பிப் பார்த்தும் தீங்கு செய்ய முடியாததைக் கண்ட மந்திரவாதி முடிவாக தன்னிடமிருந்த பெரிய அனுமார் ஆவியை ஏவி அனுப்பினான்.

அது மிகப்பெரிய தோற்றத்தோடு, பயமுறுத்துகிற விதத்தில் அந்த சகோதரிக்கு எதிரே வந்து நின்றது. அந்த சகோதரி பயப்படவுமில்லை; கலங்கவுமில்லை. அந்த ஆவியைப் பார்த்து அமைதலாய் கேட்டார்கள், "நீ உன்னைப் பெரியவனாய்க் காண்பிக்கிறாயே, என் இயேசுவைவிட நீ பெரியவனோ?"

அந்த வார்த்தையை பிசாசால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அது வேகமாய் திரும்பிப்போய் அந்த மந்திரவாதியை அடித்துப்போட்டது. முடிவாக அந்த விசுவாசி சென்று அந்த மந்திரவாதிக்காக ஜெபிக்க வேண்டியதாயிற்று!

நம் கர்த்தர் பெரியவர்; உலகத்திலிருப்பவனிலும் நம்மில் இருப்பவர் பெரியவர். அல்லேலூயா!

இன்றைக்கு உலகத்திலுள்ள மந்திரவாதிகள், குறி சொல்லுவோர் தங்கள் கைகளில் அசுத்த ஆவிகளின் வல்லமையை அடக்கி வைத்துக்கொண்டு அதினால் மந்திர வித்தைகளைக் காண்பிக்கிறார்கள். அற்புதங்களைச் செய்கிறார்கள். அற்புதங்களை பிசாசும் செய்வான் என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறதே!

அன்றைக்கு பார்வோனுக்கு முன்பாக மோசே கோலைப் போட்டபோது அது சர்ப்பமாயிற்று. இது கர்த்தர் செய்த அற்புதம். அதே நேரத்தில் எகிப்திலுள்ள சாஸ்திரிகளும், சூனியக்காரரும், மந்திரவாதிகளும் தங்களிடமிருந்த பிசாசின் வல்லமையினால் கோலை கீழே போட்டு அதை சர்ப்பமாக்கினார்கள்.

வெளிப்பார்வைக்கு அந்த இரண்டும் ஒன்றுபோல் தெரிந்தாலும் கர்த்தர் பெரியவர் என்பதை நிரூபிக்கும்படிக்கு ஒரு காரியம் நிகழ்ந்தது. சர்ப்பமாய் நெளிந்த மோசேயின் கோலானது மற்ற எல்லாருடைய கோல்களையும் விழுங்கிப் போட்டது (யாத் 7:9-11).

ஆரோன், மோசேயின் மூலம் கர்த்தர் வாதைகளை எகிப்துக்கு அனுப்பியபோது ஒன்றிரண்டு வாதைகளை மந்திரவாதிகளும் செய்தார்கள். உண்மைதான். யாத்திராகமம் 8:17-19 வசனங்களை வாசித்துப் பாருங்கள். ''ஆரோன் தன் கையில் இருந்த தன் கோலை நீட்டி பூமியின் புழுதியின் மேல் அடித்தான்; அப்பொழுது அது மனிதர் மேலும் மிருக ஜீவன்கள் மேலும் பேன்களாய் எகிப்து தேசமெங்கும் பூமியின் புழுதியெல்லாம் பரவிற்று.

மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் பேன்களைப் பிறப்பிக்கும்படி பிரயத்தனஞ் செய்தார்கள். செய்தும் அவர்களால் கூடாமற்போயிற்று; அப்பொழுது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது தேவனுடைய விரல் என்றார்கள்'' (யாத் 8:17-19).

மட்டுமல்ல, யாத்திராகமம் 9:11 சொல்கிறது: ''மந்திரவாதிகளும் மோசேக்கு முன்பாக நிற்கக் கூடாதிருந்

தது'' காரணம், மந்திரவாதிகளோடு இருந்தவனைப்பார்க்கிலும் மோசேயோடு இருந்தவர் பெரியவர்!

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தைப் பிடித்திருக்கும் பெரிய நோய் என்னவென்றால், ஐயா, எங்களுக்கு விரோதமாய் யாரோ செய்வினை செய்துவிட்டார்கள்; யாரோ பில்லிசூனியம் செய்து விட்டார்கள்; யாரோ நாங்கள் முன்னேற முடியாதபடி ஏதேதோ செய்கிறார்கள் என்று பயந்து சாகிறார்கள்.

காரணம் என்ன தெரியுமா? கர்த்தர் பெரியவர் என்கிற தரிசனம் அவர்களுக்கில்லை. கர்த்தர் தங்களுக்காக பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்கிற விசுவாசமில்லை!

வேதத்தில் திட்டமாய் ஆண்டவர் உனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார், ''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை! இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதல் இல்லை'' *(எண் 23:23).*

''உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்'' *(ஏசா 57:14).*

''இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும் மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்'' *(சங் 91:5,6).*

கர்த்தர் பெரியவர்! வல்லமையுள்ளவர்! அவர் நமக்கு அடைக்கலமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறார். உலகத்திலிருப்பவனிலும் உங்களிலிருப்பவர் பெரியவர்.

இன்னொரு நல்ல உதாரணம் தானியேல்! அன்றைக்கு பாபிலோன் அரண்மனையில் ஏராளம் மந்திரவாதிகளும் சூனியக்காரரும் இருந்தார்கள். ஆனால் தானியேலோடு

கர்த்தர் இருந்தார். தானியேலின் தேவன் பெரியவரா இருந்தார்.

ஆகவே வேதம் சொல்கிறது, "ஞானத்துக்கும் புத்திக்குமடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களை கேட்டு விசாரித்தானே, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராய் கண்டான்" (தானி 1:20).

நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனம் கண்டபோது அது என்ன சொப்பனம் என்பதை எந்த சாஸ்திரிகளாலும் ஜோசியராலும் சொல்ல முடியவில்லை! ஆனால் தானியேலின் தேவன் பெரியவராயிருந்து அதை தானியேலுக்கு விளக்கிக் கூற கிருபையுடையவராக இருந்தார்

அல்லேலூயா!

தேவபிள்ளையே, உலகத்திலிருப்பவனிலும் உன்னில் இருப்பவர் பெரியவராயிருக்கிறபடியால், நீ உலகத்தை சார்ந்துகொள்ளாமல், கர்த்தரை சார்ந்துகொள்ளுவாயாக. உலகத்திற்குரிய வேஷம் தரிக்காமல், கர்த்தருக்கேற்ற பரிசுத்தத்தை தரித்துக்கொள்!

உலகத்தின் அதிபதி உன்னிடத்தில் வரும்போது அவனுக்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாமல் இருக்கட்டும்.

இயேசுவின் வாழ்க்கை அப்படி முன்மாதிரியாக இருந்தது "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், எனக்கு அவனிடத்தில் ஒன்றுமில்லை" (யோவான் 14:30).

உலகத்திலிருப்பவன் உனக்குள் வந்துவிடாதபடி அவனுக்குரியவைகளை வெறுத்துத் தள்ளு. உலக சிநேகிதம், உலக வேஷம், உலக நேசம், உலகத்தின் ஆசை இச்சைகள் உனக்குள் வந்துவிடாதபடி உன்னைக் காத்துக்கொள்.

ஒரு மீன் கடலுக்குள்ளே, உப்புத் தண்ணீருக்குள்ளே சதா காலமும் வாழ்ந்துகொண்டிந்தாலும்கூட தன் சரீரத்தில் உப்பு ஏறுவதற்கு அது இடங்கொடுப்பதில்லை.

காரணம், அந்த மீனுக்குள் ஜீவன் இருக்கிறது. அந்த ஜீவன் மீனைப் பாதுகாக்கிறது!

உனக்குள் உன் ஜீவனாகிய கர்த்தர் இருப்பாரென்றால் உலகத்தின் எந்த இச்சைகளும், ஆபாசங்களும் உன்னை மேற்கொள்ளுவதில்லை! உன்னில் இருக்கிறவர் பெரியவர்.

உலகத்திலிருப்பவன் வஞ்சிக்கிறவன். ஆனால் நம்மில் இருக்கிறவரோ உலக ரட்சகர் (யோவான் 4:42). மாமிசம், பிசாசின் பிடியிலிருந்து நம்மை மீட்டெடுக்கிறார்.

அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறார், "பிதா வானவர் குமாரனை உலக ரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்" (I யோவான் 4:14). ஆம், நம் கர்த்தர் பெரியவர்!

உலகத்திலிருக்கிற சாத்தான் தந்திரமாய் நம்மிடத்தில் வரக்கூடும். ஆனால் அவனுடைய தந்திரங்களை முறியடிக்க கர்த்தர் நமக்கு சர்வாயுதவர்க்கங்களை தரித்திருக்கிறார்.

சாத்தான் நம்மிடத்தில் போராடுவான். வேதம் நமக்கு வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு போராட்டம் உண்டு என்று எச்சரிக்கிறது. என்றாலும் நமக்கு ஜெயங்கொடுக்கிறவர் பெரியவராய் இருக்கிறார்: இயேசு நமக்கு சொன்னார், "உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்"

நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்! அவர் பெரியவராய் இருக்கிறார்.

நம் தேவனை நாம் துதிப்போமா? ஸ்தோத்தரித்து அவரை மகிமைப்படுத்துவோமா? எரேமியாவோடு சேர்ந்து நாம் அவரை உயர்த்துவோம். "சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே, யோசனையில் பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்" (எரே 32:18).

கர்த்தர் பெரியவர்! ஆமென்! அல்லேலூயா!

அத்தியாயம் 8

பொற்சிலையிலும் பெரியவர்!

"சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று" (தானி 2:35).

நேபுகாத்நேச்சார் ஒரு பெரிய தெய்வத்தை உண்டாக்க நினைத்தான். ஆகவே அவன் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து பாபிலோன் மாகாணத்திலிருக்கிற தூரா என்னும் சம பூமியிலே நிறுத்தினான்.

மட்டுமல்ல, எக்காளம், நாதசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீத வாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது தாழ விழுந்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற் சிலையைப் பணிந்துகொள்ளக்கடவீர்கள் என்று கட்டியக்காரன் மூலம் அறிவித்தான்.

பாபிலோன் தேசத்திலுள்ள அத்தனை ஜனங்களும் அத்தனை பிரதானிகளும் அப்படி பணிந்துகொள்ள ஆயத்தமாயிருந்தனர்.

ஆனால் அங்கிருந்த மூன்று எபிரெய வாலிபர்களின் கண்களில், "நாங்கள் ஆராதிக்கிற ஜீவனுள்ள தேவன் அந்த பொற்சிலையைவிடப் பெரியவர்" என்கிற தரிசனம் இருந்தது. அவர்கள் பாபிலோனின் தேவர்களுக்கு ஆராதனை செய்யவுமில்லை, ராஜா நிறுத்தின பொற் சிலையை வணங்கவுமில்லை.

ராஜாவின் கோபம் அதிகமானது. "நீங்கள் பொற் சிலையை பணிந்துகொள்ளமற்போனால் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள். உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார்?" என்றான்.

அந்த தேவன் பெரியவர்! அவர் பொற்சிலையிலும் பெரியவர்! நேபுகாத்நேச்சாரிலும் பெரியவர்! அக்கினிச் சூளையின் உக்கிரத்தை அவிப்பதிலும் பெரியவர்!

தைரியமாய் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி, "நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை, நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்" (தானி 3:16,17).

தேவனுடைய பிள்ளைகளுடைய இருதயத்தில் நாங்கள் ஆராதிக்கிற தேவன் யார் என்பதைப் பற்றிய அறிவு கண்டிப்பாக இருக்க வேண்டும். "கர்த்தர் பெரியவர், அவர் வல்லவர்!" என்பதே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவரின் முழக்கமாக இருந்தது. அந்த விசுவாசத்தை கர்த்தர் கனம் பண்ணினார்.

மூன்று பேரும் அக்கினிச் சூளையில் விழுந்தபோது நம் கர்த்தர் நான்காவது ஆளாக, அக்கினியின் உக்கிரத்தை அவிக்கிறவராக அந்த சூளையின் மத்தியில் இறங்கி வந்தார். கட்டுண்டு விழுந்த அவர்கள் கட்டுகளெல்லாம் உடைக்கப்பட்டவர்களாய் அக்கினி ஜுவாலையில் உலாவினார்கள் வேதம் சொல்கிறது: "நான்காம் ஆளின் சாயல் தேவ புத்திரனுக்கு ஒப்பாய் இருந்தது" (தானியேல் 3:26).

அவர்கள் வெற்றியாய் உலாவினார்கள்; கர்த்தரோடு உலாவினார்கள்; பெரியவரோடு சேர்ந்து ஜெயம் சிறந்தார்கள்.

தேவனுடைய பிள்ளையே, நீ அக்கினிச் சூளை போன்ற சோதனையின் வழியாக கடந்து செல்கிறாயா? சத்துரு அக்கினிச் சூளையை ஏழு மடங்கு உனக்காக அதிகமாகசூடாக்கும்படி உத்தரவிட்டானோ? பயப்படாதே, கலங்காதே! அவர் உன்னோடுகூட இருக்கிறார். அவர் சொன்ன வாக்குத்தத்தத்தை நினைவுகூருவாயாக!

"நீ தண்ணீரைக் கடக்கும்போது நான் உன்னோடுகூட இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும்போது வேகா திருப்பாய். அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது"

(ஏசாயா 43:2).

திரளான தண்ணீர்களைப் பார்க்கிலும் அவர் பெரியவர்! ஆறுகளைப் பார்க்கிலும் பெரியவர்! அக்கினி ஜுவாலைகளைப் பார்க்கிலும் அவர் பெரியவர்! அந்த தேவன் உன்னுடையவர். அவர் உன்னை நேசிக்கிறவர். உன் மேல் அன்புகூருகிறவர். உன்னை தப்புவித்து விடுதலையாக்குகிறவர். ஆமென்; அல்லேலூயா!

ஒருபோதும் பொற்சிலையை வணங்காதே ராஜாக்களின் மிரட்டலுக்குப் பயப்படாதே. பெரியவரான கர்த்தர் உன்னோடுகூட இருக்கிறார். உன்னோடுகூட உலாவுகிறார்!

அவர் பெரியவரானபடியினால் அவருடைய ஜெயத்தை நீ சுதந்தரித்துக்கொள்வாய். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவைக் குறித்து வேதம் சொல்லுகிறது: "அந்த புருஷர்களுடைய சரீரத்தின்மேல் அக்கினி சேதம் செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்கள் மேல் வீசாமலும் இருந்தது" (தானியேல் 3:27). பெரியவரான கர்த்தர் எவ்வளவு பெரிய அற்புதம் செய்கிறவர்! அவர் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் சொல்லி முடியாத அற்புதங்களையும் செய்கிறவர்! ஆமென், அல்லேலூயா!

பெரியவர் என்று சாட்சியிட்ட சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் திட்டமான சாட்சியினால் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் தொடப்பட்டான். தான் உண்டாக்கின தனது பொற்சிலையைப் புறக்கணித்தான். அவன் என்ன சொன்னான் தெரியுமா? "சாத்ராக், மேஷாக்,

ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவினுடைய கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததனால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜாதியானும், எந்த பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்றான்''
(தானியேல் 3:28,29).

கர்த்தர்போல் இரட்சிக்கத்தக்க தேவன்வேறு ஒருவருமில்லை என்பதுதான் அவனுடைய திடமான சாட்சியாக இருந்தது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் தேவன் நம்முடைய தேவனிலும் பெரியவராயிருக்கிறார். நாம் அவரைப் பெரியவர் என்று போற்றும்போது ராஜாக்களும் நம்மண்டை ஓடி வருவார்கள்.

சொப்பனத்தின் சிலை:-

ஒரு நாள் நேபுகாத்நேச்சர் தன்னுடைய படுக்கையின் மேல் படுத்து இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன என்கிற நினைவுகளோடு தூங்கினபோது, மறைபொருள்களை வெளிப்படுத்துகிற தேவன் சம்பவிக்கப்போகிறவைகளை அவனுக்குத் தெரிவிக்கச் சித்தங்கொண்டார்.

அதனுடைய அர்த்தத்தையும் விளக்கத்தையும் தானியேல் விவரித்தார். ''ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதன் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலைப்பக்கம் பொன்னும் அதன் மார்பும் அதன் புயங்களும் வெள்ளியும், அதன் வயிறும் தொடையும் வெண்கலமும், அதன் கால்கள் இரும்

பும், அதன் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணு மாய் இருந்தது. நீ பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமா கிய அதன் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப் போட்டது இப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும், வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங் குண்டு, கோடைக்காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து போகிற பதரைப் போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இட மும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டு போயிற்று. சிலையை மோதின கல்லோவென்ருல், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று''

(தானியேல் 2:31-35).

அந்த சிலைதான் பூமியின் சாம்ராஜ்யங்கள், அரசாங் கங்கள். பாபிலோன் சாம்ராஜ்யத்தைத் தொடர்ந்து வரப் போகிற மேதிய, பெர்சிய, கிரேக்க, ரோம சாம்ராஜ்யங் களே அந்த பொற்சிலையின் பல பாகங்களைக் குறித்துக் கொண்டிருந்தன. கடைசி ராஜ்யம் இரும்பும் களிமண் ணும்போல கூட்டாட்சியாய் அமையும். கடைசியில் நில வும் அரசாங்கங்கள் இரும்பும் களிமண்ணும்போன்ற கூட் டாட்சிகள்தான் இரும்பு என்பது இரும்புத் திரை நாடு களான கம்யூனிஸ்ட் தேசங்களைக் குறிக்கிறது. களிமண் என்பது சுயாதீனமான நாடுகளைக் குறிக்கிறது.

அந்த சிலை எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அந்த சிலையை மோதியடித்து உடைக்கக்கூடிய கர்த்தர் மிகவும் பெரியவராயிருக்கிருர். தானியேல் தீர்க்கதரிசி சொல் கிருர்: அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் அந்த ராஜ்யம் வேறும் ஜனத்திற்கு விடப்படுவதில்லை. ஒரு கல் கையால் பெயாக்கப் படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு இரும்பையும், வெண் கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னை

யும் நொறுக்கினதைக் கண்டீரே. அப்படியே அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி தானே என்றென்றும் நிற்கும் என்றார்.

அந்தக் கல் கிறிஸ்துவே. அவர் பெரியவர். அவர் ராஜாதி ராஜா. அவர் வரும்போது உலகத்தின் ராஜ்யங்களையும், அரசாங்கங்களையும் தகர்த்து எறிவார். மட்டுமல்லாமல், அந்தக் கல் பெரிதுமாகி பூமி முழுவதையும் நிரப்பும். கிறிஸ்து ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாய் உலகம் முழுவதையும் அரசாளுவார். பொற்சிலையைப் பார்க்கிலும் பெரியவரான கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார். நாமே அவரோடுகூட சேர்ந்து அரசாளுவோம்.

அன்றைக்கு வீடு கட்டுகிறவர்கள் அந்தக் கல்லை ஆகாததென்று தள்ளினார்கள். பரிசேயரால், சதுசேயரால் அவர் புறக்கணிக்கப்பட்டார். யூதர்களால் அற்பமாய் எண்ணப்பட்டார். பிலாத்துவால் தண்டனைக்குள்ளானார். கைகளினால் பெயர்க்கப்படாத அந்தக் கல்தான் உலகத்தை இனி ஆளப்போகிறது.

தேவபிள்ளையே, இன்று நீ வெறும் கல்லைப்போல அற்பமாய் ஏளனமாய் காணப்படலாம். ஆனால் ஒரு நாள் நீ பெரியவராகிய கிறிஸ்துவோடு ஆளுகை செய்வாய் என்பதை மறந்து போகாதே. உன் தேவன் பெரியவர், அவர் சீக்கிரமாய் வருகிறார்.

வேதம் சொல்கிறது, வானத்தின் கீழே எங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம். சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்.

கர்த்தர் பெரியவர்! ஆமென், அல்லேலூயா!

அவர் பெரியவராயிருப்பார்!

''அவர் பெரியவராயிருப்பார்; உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்'' (லூக் 1:32).

''சீயோனில் வாசமாயிருக்கிறவளே, சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருப்பார்'' (ஏசா 12:6).

ஒரு ஊரில் ஒரு பெரிய குத்துச்சண்டைக்காரன் இருந்தான். அவனது வழுக்குத் தலையும், சட்டி முகமும், உருண்டு திரண்ட தோளும், புயமும் பார்ப்பவர்களையெல்லாம் பயமுறுத்தக்கூடியதாக இருந்தது.

ஒரு நாள் அவன் தன்னோடுகூட குத்துச் சண்டையிட்ட கடைசி பெரிய எதிர்யை குத்தி மடக்கி வீழ்த்தினான். தனக்கு எதிராக குத்துச்சண்டையிட்ட ஒவ்வொருவரையும் அவன் ஜெயங்கொண்டபடியினாலே அவனுக்குள் பெருமை எழுந்தது.

''பூமியிலுள்ள எல்லா பலசாலிகளையும் நான் வென்று விட்டேன். கடவுள் என்று ஒருவர் இருப்பாரானால் அவர் என்னிடத்தில் வரட்டும். நான் அவரையும் மடக்கி ஜெயம் பெறுவேன். நான் அவரைவிட பெரியவன் என்று நிரூபிப்பேன்'' என்றான்

நேரம் கடந்தது. ஏராளமான மக்கள் அவன் வானத்தை நோக்கி சவால் விடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு குளவி அவன் தலைக்குமேல் பறந்து சுற்றியது மறு வினாடி அந்தக் குளவி அந்த மல்யுத்த வீரனின் வழுக்குத் தலையில் ஒரு 'கொட்டு' கொட்டிவிட்டு பறந்து சென்றது. அது பயங்கரமான விஷமுள்ள குளவியாயிருந்தபடியால் அந்த மல்யுத்த வீரன் மல்லாந்து செத்து விழுந்தான்.

கர்த்தர் பெரியவர்; அவரை எதிர்த்து நிற்க யாராலும் முடியாது. அப். பவுல் கேட்கிறார், "மனுஷனே, தேவனோடு எதிர்த்து தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி, நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லாமோ?" (ரோமர் 9:20).

எந்த மனுஷனைப்பார்க்கிலும் கர்த்தர் பெரியவர்! எந்த தேவதூதனைப் பார்க்கிலும் கர்த்தர் பெரியவர்! எந்த ஆளுகை, துரைத்தனத்தைப்பார்க்கிலும் கர்த்தர் பெரியவர்!

எபிரெயருக்கு எழுதின நிருபம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள். கிறிஸ்து எவ்வளவு பெரியவர் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

1. தேவதூதரிலும் பெரியவர்:-

எபிரெயர் முதலாம் அதிகாரம், அவர் தேவதூதரிலும் பெரியவர் என்று நமக்கு அறிவுறுத்துகிறது

"தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது, தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்" என்றார்.

மேலும், "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?" என்று வேதம் கேட்கிறது (எபிரெயர் 1:6,13)

தேவதூதர்கள் பலமிக்கவர்கள்தான். ஒரு சங்கார தூதன் எகிப்தின் தலைச்சன்களையெல்லாம் அழித்தான். ஒரு தேவதூதன் அசீரியரின் பாளயத்திற்குள் புகுந்து ஒரு லட்சத்து எண்பதாயிரம் பேரை ஒரே இரவில் சங்கரித்தான். நம் கர்த்தரின் சேனையில் மிகாவேலின் தலைமையில் பலமிக்க தேவதூதர்கள் உண்டு ஆனாலும் நம் கிறிஸ்து தேவதூதர்களிலும் பெரியவர்; தேவதூதர்களால் ஆராதிக்கப்படுகிற தேவன் பெரியவர்!

2. மோசேயிலும் பெரியவர்:-

எபிரெயர் மூன்றும் அதிகாரம், கிறிஸ்துவை மோசேயிலும் பெரியவர் என்று சுட்டிக் காண்பிக்கிறது.

''மோசே தேவனுடைய வீட்டிலெல்லாம் உண்மையுள்ளவனுயிருந்ததுபோல இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிருர். வீட்டை உண்டு பண்ணினவன் வீட்டைப் பார்க்கிலும் அதிக கனத்துக்குரியவனுயிருக்கிருன். அதுபோலவே மோசேயைப் பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிருர்'' (எபி 3:2,3).

மோசே கொண்டுவந்த நியாயப்பிரமாணம் இஸ்ரவேலரை அடிமைத்தனத்திற்குள்ளாக்கிற்று. ஆனுல் கிறிஸ்து கொண்டுவந்த கிருபையின் பிரமாணம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கிற்று!

ஆம், கிறிஸ்து பெரியவர்! அவர் மோசேயைப் பார்க்கிலும் பெரியவர்! அதிக கனத்துக்குப் பாத்திரர்!

3. யோசுவாவிலும் பெரியவர்:-

எபிரெயர் நான்காம் அதிகாரம், கிறிஸ்து யோசுவாவிலும் பெரியவர் என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

''யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்குட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேருெரு நாளைக் குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரே. ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்'' (எபி 4:8-10).

யோசுவா கொடுத்த இளைப்பாறுதலைப் பார்க்கிலும் கிறிஸ்து கொடுத்த இளைப்பாறுதல் மேன்மையானது! நித்தியமானது! கர்த்தர் யோசுவாவிலும் பெரியவர்!

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அன்போடு அவர் அழைக்கிறார்.

தொடர்ந்து எபிரெயரின் புத்தகத்தை வாசித்துப் பாருங்கள் ஐந்தாம் அதிகாரம் கிறிஸ்து ஆரோனிலும் பெரியவர் என்பதை நமக்கு விளக்குகிறது. ஆறும் அதிகாரம் ஆபிரகாமிலும் பெரியவர் என்றும், ஏழாம் அதிகாரம் மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையைப் பார்க்கிலும் அவர் பெரியவர் என்பதையும் விளக்குகின்றன.

எபிரெயர் எட்டாம் அதிகாரம் அவர் ஆசாரியர்களுக்கு மேலானவர் என்றும், ஒன்பதாம் அதிகாரம் ஆசாரிய முறைமைகள், சடங்காச்சாரங்களுக்கு மேலானவர் என்றும், பத்தாம் அதிகாரம் அவர் பலிகளுக்கு மேலானவர் என்றும், பதினோராம்அதிகாரம் விசுவாச வீரர்களிலும் பெரியவரென்றும், பன்னிரண்டாம் அதிகாரம் அவர் சகல பிரமாணங்களைப் பார்க்கிலும் பெரியவரென்றும், பதின்மூன்றும் அதிகாரம் அவர் சகல போதகங்களைப் பார்க்கிலும் பெரியவரென்றும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன!

ஆம்! நம் கர்த்தர் பெரியவர்! பெரிய தேவனை நாம் நமக்கு தெய்வமாய்க் கொண்டிருக்கிறோம். எபிரெயர் நிருபம் நம் கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதைச் சுட்டிக் காட்டி பரவசப்படுத்துகிறது!

கர்த்தர் பெரியவர்! ஆமென், அல்லேலூயா!

அத்தியாயம் 10

அவர் பெரியவர் பெரியவர்!

"தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து, சகலத்தையும் அறிந்திருக்கிறார்"

(I யோவான் 3:20).

நம்முடைய தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவர். நம்முடைய எண்ணங்களைப் பார்க்கிலும் பெரியவர். மட்டுமல்ல, அவர் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிறவர்!

நம்முடைய இருதயம் நினைக்கிற நினைவுகள் கொஞ்சம், நம்முடைய கண்கள் பார்க்கிறதும் கொஞ்சம்; நம்முடைய சிந்தனைகள் எட்டுகிற தூரமும் கொஞ்சம்; ஆனால், கர்த்தரோ பெரியவராய் சகலத்தையும் ஆராய்ந்திருக்கிறார்.

ஒரு நாள் ஒரு பக்தன் நான்கு மாடிக் கட்டிடத்திலிருந்து கீழே கார்கள் வேகமாக செல்கிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு விபத்து ஏற்பட்டது. இரண்டு பேருந்துகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டன. போக்குவரத்து தடையாயிற்று. பின்னலிருந்து வந்த வாகனங்கள் அதைக் கவனிக்காமல் முந்திக் கொண்டு செல்ல திரும்பி வந்து போக்குவரத்து தடையின் மத்தியில் நன்ருக சிக்கிக் கொண்டன. அவர்களால் முன்னலும் செல்ல முடியவில்லை பின்னலும் திரும்பிச் செல்ல முடியவில்லை

ஒருவேளை, அவர்களுக்கு உயரத்திலிருந்தவர் தகவல் கொடுத்து வேறு திசையில் செல்லுங்கள் என்று அறிவித்திருந்திருப்பாரென்ருல் அவர்கள் வேறு பாதை வழியாக சென்றிருப்பார்கள். அவர்கள் இப்படி போக்குவரத்து தடையில் மாட்டியிருக்க மாட்டார்கள் ஆனல் அவர்களுடைய இருதயம் அதைப்பற்றி அறியாதபடியினல் அவர்

கள் முன்னுலிருக்கிற சூழ்நிலையைக் குறித்து தெரியாமல், பல கார்களின் மத்தியில் வந்து சிக்கிக்கொண்டார்கள்.

பல வேளைகளில் நம்முடைய சுயசிந்தனையின்படி செய்வதினால் பல பிரச்சனைகளுக்குள் நாம் சிக்கிவிடுகிறோம் ஆனால் மேலேயிருக்கிற நம்முடைய தேவன் பெரியவராக, நமது வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் நடக்க வேண்டிய வழியைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறார். தமது பரிசுத்த ஆவியின் மூலமாக நமக்கு ஆலோசனை தருவதற்கும் ஆயத்தமுடையவராக இருக்கிறார். நமக்கு நிகழ்காலம் மட்டும்தான் தெரியும்! ஆனால் கர்த்தருக்கோ வருங்காலமும் தெரியும். ஆகவே, கர்த்தர் நம் இருதயத்திலும் பெரியவராக இருக்கிறார்.

சிலர் தங்கள் இருதயத்தின் எண்ணங்களின்படியே செம்மையாய் நடக்கிறதாக சொல்லுகிறார்கள். சிலர் தங்கள் மனச்சாட்சியின்படியே நடக்கிறதாக எண்ணுகிறார்கள். ஆனால் இவைகள் சில வேளைகளில் தவறாக இயங்கக்கூடும். நீ தொடர்ந்து பாவஞ் செய்துகொண்டிருந்தால் உன் மனச்சாட்சி மழுங்கிப்போகும். உன்னுடைய மாம்சத்தைப் பிரியப்படுத்துவதற்காகவே உன்னுடைய இருதயம் இச்சைகளின் வழியில் நடக்க ஆரம்பிக்கும். உன்னுடைய இருதயத்தையோ, உன்னுடைய சுய சிந்தனையையோ, உன்னுடைய மனச்சாட்சியையோ உன்னால் சார்ந்திருக்க முடியாது. சார்ந்துகொள்ளக்கூடிய ஒரே ஒருவர் நம் கர்த்தர் மட்டுமே. அவர் நம்முடைய இருதயத்திலும் பெரியவராக இருக்கிறார்.

அனனியா, சப்பீராள் தங்கள் மனச்சாட்சியை மழுக்கினார்கள். இருதயத்தில் அவர்கள் தங்களைக் குத்தின நினைவுகளைப் பொருட்படுத்தாமல் கர்த்தருடைய பங்கை வஞ்சித்து தங்களுக்கென்று வைத்துக்கொண்டார்கள். கர்த்தர் தங்களுடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து தங்களுடைய ஒவ்வொரு சிந்தனையையும் அறிகிறார் என்பதை மறந்துபோனார்கள். கர்த்தர் நம்முடைய

நினைவுகளின் தோற்றத்தைக்கூட ஆராயக்கூடிய பெரியவராக இருக்கிறார். கர்த்தர் பெரியவர்!

இந்த அத்தியாயத்திலே நம்முடைய ஆண்டவர் எதிலெல்லாம் பெரியவர் என்பதை நாம் சற்று தியானித்துப் பார்ப்போம்!

1. அவர் பெரிய தீர்க்கதரிசி:-

வேதத்தில் பல தீர்க்கதரிசிகளை நாம் பார்க்கிறோம். அவர்கள் கர்த்தருடைய வாயாக இருந்து, வருங்காலத்தை முன்னறிவிக்கிறவர்களாக இருந்தார்கள். ராஜாக்களுக்கு தேவனுடைய ஆலோசனைகளைச் சொல்லுகிறவர்களாக இருந்தார்கள். தீர்க்கமான பார்வையுடையவர்களாக இருந்து தம்முடைய தீர்க்கதரிசனக் கண்களைக்கொண்டு எதிர்காலத்தை அறிந்து கூறுகிறவர்களாக இருந்தார்கள்.

வேதத்தில் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் போன்ற பெரிய தீர்க்கதரிசிகளும், ஓசியா, யோவேல், ஆமோஸ், யோனா, மீகா போன்ற சிறிய தீர்க்கதரிசிகளும் உண்டு. ஆனால் நம்முடைய ஆண்டவரோ எல்லா தீர்க்கதரிசிகளைப்பார்க்கிலும் பெரியவராக இருக்கிறார்.

வேதம் அவரை, "மகா தீர்க்கதரிசி" என்று அழைக்கிறது. இயேசுவினுடைய அற்புத கிரியைகளைப் பார்த்த இஸ்ரவேலர் அவரை, மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களை சந்தித்தார் என்றும் சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள் (லூக் 7:16).

மாபெரும் தீர்க்கதரிசியான இயேசு கிறிஸ்துவைக் குறித்து மோசேயிடத்தில் கர்த்தர் தீர்க்கதரிசனமாக உரைத்தார்: "உம்மைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவருகளுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்" (உபா 18:18) என்றார். பெரிய தீர்க்க

தரிசி வரப்போகிறார் என்பதைப் பல தீர்க்கதரிசிகளின் மூலமாக கர்த்தர் தீர்க்கதரிசனமாய் அறிவித்தார்.

புதிய ஏற்பாட்டில் நாம் இயேசுவை நோக்கிப் பார்க்கும்போது அவரைப் பெரிய ஆசாரியனாகவும், பெரிய ராஜாவாகவும், பெரிய தீர்க்கதரிசியாகவும் கண்டுகொள்கிறோம். இயேசுவைப் பற்றி ஜனங்கள் "இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு" என்றார்கள் (மத் 21:11). இன்னும் சிலர், "அவர் ஒரு தீர்க்கதரிசியல்ல, தீர்த்கதரிசிகளில் ஒருவனைப் போல இருக்கிறார்" என்று சொன்னார்கள் (மாற்கு 6:15). எம்மாவூருக்குப் போன சீஷர்கள் அவரைப்பற்றி, "நசரேயனாகிய இயேசு தேவனுக்கு முன்பாகவும் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும். செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாக இருந்தார்" என்று சாட்சியிட்டார்கள் (லூக்கா 24:17).

இயேசு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தார். ஜனங்களுடைய இருதயத்திலிருக்கிறவைகளை அறியக்கூடிய தீர்க்கதரிசியாக விளங்கினார். ஒருவனைக் குறித்தும் அவருக்குப் போதிக்க வேண்டியதில்லை. அவரே ஒவ்வொருவரையும் ஆராய்ந்து அறிந்திருந்தார். மட்டுமல்ல, பிதாவினுடைய இருதயத்திலுள்ளதை அறிந்து மக்களுக்குப் போதிக்கிறவராகவும் விளங்கினார். மத்தேயு 24 ஆம் அதிகாரம் முழுவதும் உலகத்தின் முடிவைக் குறித்து இயேசு தீர்க்கதரிசனமாக உரைத்தாகவே இருக்கிறது. அவர் உரைத்த தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றும் ஆம் என்றும் ஆமென் என்றும் விளங்குகிறது.

இன்றைக்கு உலக ஜனங்கள் வருங்காலத்தை அறிவதற்காக தீர்க்கதரிசிகளிடத்தில் ஓடுகிறார்கள். தீர்க்கதரிசனங்கள் தவறும்போது அந்த ஜனங்கள் இடறிப்போய் விடுகிறார்கள். ஆனால் தீர்க்கதரிசிகளிலும் பெரியவரான, கர்த்தர் உங்களோடு கூட இருக்கிறார் என்பதை மறந்துவிட வேண்டாம். அவரே பிதாவினிடத்திலிருந்து உங்

களுக்கு அறிவிக்கிறவர். அவருக்குச் செவிகொடுங்கள். நீங்கள் ஒருபோதும் இடறிப்போவதில்லை.

2 அவர் பெரிய பிரதான ஆசாரியர்:-

வேதத்தில் பல பிரதான ஆசாரியர்களைப் பார்க்கிறோம். முதல் பிரதான ஆசாரியன் ஆரோன். அதை அடுத்து எலியேசர் பிரதான ஆசாரியனாக இருந்தான் இயேசுவின் நாட்களில் அன்னா, காய்பா' பிரதான ஆசாரியர்களாக இருந்தார்கள். பிரதான ஆசாரியனுடைய வேலை ஜனங்களை தேவனோடுகூட ஒப்புரவாக்குவதுதான்! பழைய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியர்கள் ஜனங்களுக்காக பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தோடுகூட மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து தேவனிடத்தில் ஜனங்களுக்காக பரிந்து பேசுவார்கள். தேவ சமுகத்திலிருந்து ஜனங்களை ஆசீர்வதிப்பார்கள்!

இயேசு பிரதான ஆசாரியனாக இருக்கிறார். அவரைக் குறித்து வேதம் மகா பிரதான ஆசாரியன் என்று வர்ணிக்கிறது. "வானங்களின் வழியாய் பரலோகத்திற்குப் போன தேவக்குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறபடியினால் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்"

(எபி 4:14)

நம்முடைய பிரதான ஆசாரியர் மற்ற எல்லா பிரதான ஆசாரியர்களிலும் பெரியவர்! அல்லேலூயா!

உலகத்திலுள்ள பிரதான ஆசாரியர்கள் பெலவீனமுள்ளவர்களாக இருந்தபடியினாலே ஜனங்களுடைய பாவங்களுக்காக பலியிட வேண்டியதுபோல தங்களுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாக இருந்தது. ஆனால் இயேசுவோ, பாவமில்லாத பிரதான ஆசாரியனாக இருக்கிறபடியினால் சிலுவையில் சிந்தின தம்முடைய இரத்தத்தின் மூலமாக நமக்கு பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பைத் தந்து, பிதாவினுடைய வலது பாரிசத்தில் அமர்ந்து

நமக்காகப் பரிந்து பேசுகிற வல்லமையான பிரதான ஆசாரியனுக இருக்கிறுர்.

இஸ்ரவேலில் எத்தனேயோ பிரதான ஆசாரியர்கள் இருந்தார்கள்! அவர்கள் தங்களுடைய காலம் முடிந்தவுடன் மரித்து மண்ணேடு மண்ணுகிப் போனுர்கள். ஆனுல் கிறிஸ்துவோ, உயிருள்ள பிரதான ஆசாரியனுக இருக்கிறபடியினுல் நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறுர் (எபி 7:25).

இந்த தேவன் என்றென்றுமுள்ள நம்முடைய நித்திய பிரதான ஆசாரியர்; அவரே நமக்காகப் பலியானவர்; அவரே நமக்காக பரிந்து பேசுகிறவர்; அவரையே பற்றிக் கொள்ளுவோமாக!

3. பெரிய மேய்ப்பன்:-

ஆண்டவர் நம்முடைய மேய்ப்பராக இருக்கிறுர். அவர் பெரியவர். தாவீது மிக உற்சாகமான முகத்தோடு கர்த்தர் என் மேய்ப்பராக இருக்கிறபடியினுல் நான் தாழ்ச்சியடைவதேயில்லே என்று சொல்கிறுர் தாவீது முதலாவது ஆடுகளுக்கு மேய்ப்பராக இருந்தார். பின்பு இஸ்ரவேலுக்கு மேய்ப்பரானுர். ஆனுல் கர்த்தரோ, மேய்ப்பனுக்கு மேய்ப்பனுன மகா பெரிய மேய்ப்பராக இருக்கிறுர்.

எபிரெயர் 13:20, "நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினுலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக்கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களேச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக" என்று சொல்கிறது.

நாம் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது, கர்த்தர் நமக்கென்று சில சிறிய மேய்ப்பர்களே கட்டளேயிடுகிறுர்.

சபைகளுக்குச் செல்கிறோம் அங்கே போதகர்கள் நம்மை மேய்க்கிறார்கள். சுவிசேஷகர்கள் நமக்கு ஆலோசனை சொல்கிறார்கள். மேய்ப்பர்கள், தீர்க்கதரிசிகள் நம்மை நடத்துகிறார்கள். அவர்கள் எல்லாம் சிறிய மேய்ப்பர்கள் தான்! ஆனால் கர்த்தர் அவர்களைப் பார்க்கிலும் பெரியவராக இருந்து நமக்குப் பெரிய மேய்ப்பராக இருக்கிறார். பல வேளைகளில் சிறிய மேய்ப்பர்கள் பாதை தவறி போய் விடக்கூடும். தவறான போதனைகளைப் புகுத்திவிடக்கூடும். ஆனால் நீ கர்த்தரைச் சார்ந்துகொள்வாயென்றால், ஆண்டவரே, எனக்குக் கொடுக்கப்பட்ட மேய்ப்பர்களை பாதுகாத்து எனக்கு நல்ல மேய்ப்பர்களை கட்டளையிடு மென்று ஜெபித்தால் நிச்சயமாகவே கர்த்தர் உங்களுக்கு நல்ல மேய்ப்பர்களை தந்தருள்வார். எரேமியா 3:15 சொல்கிறது: "உங்களுக்கு என் இருதயத்திற்கேற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன்; அவர்கள் உங்களை அறிவோடும், புத்தியோடும் மேய்ப்பார்கள்."

அருமையான தேவனுடைய பிள்ளையே, கர்த்தர் உன்னுடைய பெரிய மேய்ப்பராக இருந்து வழிநடத்துகிறபடியினால் அவர் உன்னை புல்வெளிக்கும் அமர்ந்த தண்ணீரண்டைக்கும் அருமையாய் வழிநடத்துவார்.

4. அவர் பெரிய இரட்சிப்புமானவர்:-

பெரிய கர்த்தர் நமக்குக் கொடுப்பது பெரிய இரட்சிப்பு. அந்த பெரிய இரட்சிப்பை தருவதற்கு விலைமதிக்க முடியாத இரத்தத்தைக் கொடுத்தார்.

அவருடைய நாமமான இயேசு என்பதற்கு தம்முடைய ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்கிறவர் என்பது அர்த்தம்.

நீங்கள் தண்ணீரில் மூழ்கி மரிக்கும் தருவாயில் ஒருவர் உங்களைக் காப்பாற்றினால் நீங்கள் அவருக்கு எவ்வளவோ நன்றியுள்ளவர்களாக இருப்பீர்கள். தண்ணீரிலிருந்து என்னை இரட்சித்தார் என்று சொல்வீர்கள். ஆனால்

கிறிஸ்துவைப் பாருங்கள். அவர் பெரிய இரட்சகர். அவர் உங்களை நரகக் கடலின் பிடியிலிருந்து இரட்சிக்கிறவர். சாத்தானின் ஆளுகையிலிருந்து விடுவிக்கிறவர். நித்திய வேதனையிலிருந்து தப்புவிக்கிறவர். உங்களுடைய பாவங்களை மன்னித்து உங்களுடைய சாபங்களை நீக்கி சத்துருவினுடைய வல்லமையின்மேல் ஜெயங்கொண்டு உங்களை பூரண இரட்சிப்பிற்குள் கொண்டுவருகிறவர்.

தேவன் தருகிற இரட்சிப்பை, "பெரிய இரட்சிப்பு" என்று வேதம் வர்ணிக்கிறது. ஆகவே, அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிப்பாக எழுதுகிறார்: "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமென்றால் நாம் எப்படி தண்டனைக்கு தப்பித்துக்கொள்வோம்" (எபி 2:4).

5. பெரிய வெளிச்சமானவர்:-

நம்முடைய தேவன் பெரியவர். நமக்கு பெரிய வெளிச்சமானவர். அவருடைய வெளிச்சம் உலகமெல்லாம் வீசுகிறது! ஏசாயா தீர்க்கதரிசி அவரைக் குறித்து உரைக்கும்போது, "இருளிலிருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தை கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது" என்றார் (மத் 4:15).

இயேசு சொன்னார், "நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."

அநேக சன்மார்க்க போதகர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வழிகளை வெளிச்சமாய் காட்டுகிறார்கள். அவ்வப்போது பாதைக்கு வேண்டிய வெளிச்சங்களை அவர்கள் சொல்லித் தந்தாலும் அவர்களுடைய வழிகளெல்லாம், சிறு மண்ணெண்ணெய் சிம்னி விளக்குகளைப்போலத்தான் இருக்கிறது. நீதியின் சூரியனாகிய கர்த்தருடைய வெளிச்சத்தோடுகூட அவைகள் ஒப்பிடத்தக்கவைகளல்ல. நம்முடைய கர்த்தரே நமக்குப் பெரிய வெளிச்சமானவர்.

அப்போஸ்தலனுகிய பவுல் மிகுந்த மகிழ்ச்சியோடு கூட, ''இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தம்முடைய மகிமையின் அறிவாகிய ஒளியை [தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்களுடைய இருதயங்களிலே பிரகாசித்தார்'' (II கொரி 4:6) என்று எழுதுகிருர்.

எங்கள் இருதயங்களில் பிரகாசித்தார். இதுதான் ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையின் சாட்சி!

வெளிச்சமுண்டாகக்கடவது என்று சொல்லி வெளிச்சத்தை வீசச் செய்த நமது பெரிய தேவன், இரட்சிப்பின் ஒளியை உங்கள் குடும்பத்திலும், உங்கள் உள்ளத்திலும் வீசச் செய்வாராக! உங்கள் வீடு முழுவதும் இந்த மகிமையின் ஒளியால் நிரம்பியிருப்பதாக.

6 பெரிய தேவன்:-

நம்முடைய தேவன் மகா தேவன் என்று தீத்து 2:13-ல் நாம் வாசிக்கிறோம். அவர் மகா பெரியவர், மகா வல்லமையுள்ளவர், எங்கும் நிறைந்தவர், என்றென்றும் நம்மோடு இருக்கிறவர். அவரே மகா தேவன்.

இவ்வளவு பெரிய தேவனை நாம் தஞ்சமாகக் கொண்டிருப்பது நமக்கு எவ்வளவு பெரிய பாக்கியம்! நாம் அவரை தொழுதுகொள்ளும்போதெல்லாம் அவர் நமக்கு சமீபமாக இருப்பதுபோல தேவனை இவ்வளவு சமீபமாய் ...பற்றிருக்கும் வேறே பெரிய ஜாதி எது?

அல்லேலூயா! நம்முடைய தேவன் பெரியவர்! அவர் கல கனத்திற்கும், மகிமைக்கும் பாத்திரரானவர். அவர் ...ம்முடையவர். நாம் அவருடையவர்கள். அந்த மகா ...பரிய தேவன் முற்றிலும் நம்முடையவர். நாம் பரி...ரணமாக முற்றிலும் அவருடையவர்கள்.

ஆமென், அல்லேலூயா! கர்த்தர் பெரியவர்!

மனம் விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலம் உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

'கர்த்தர் பெரியவர்' என்ற இந்த புத்தகத்தை உங்களுடைய கைகளில் தவழச்செய்த தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தர் என் வாழ்வில் பெரியவராய் இருந்தார். ஆண்டவரே, நீர் பெரியவர் என்று மீண்டும் மீண்டும் அறிக்கையிட்டபோது பெரிய காரியங்களையும், மகிமையான காரியங்களையும் என் வாழ்க்கையில் செய்தருளினார். அதைக் குறித்து நான் தியானித்த தியானங்களே இப்பொழுது புத்தக வடிவில் வெளிவந்திருக்கிறது.

என்னுடைய புத்தக ஊழியத்தை ஆரம்பித்த நாள் முதற்கொண்டு, சகோதரி மல்லிகா துரைப்பாண்டியன் அவர்கள் என்னை மிகவும் உற்சாகப்படுத்திக்கொண்டே வந்திருந்தார்கள். 1986 ஆம் ஆண்டு நான் தூத்துக்குடியிலுள்ள தூய பேட்ரிக் ஆலயத்தில் செய்தி கொடுக்கச் சென்றபோது நான் புத்தகம் எழுதுவதற்கு ஒரு தொகையை அன்போடுகூட கொடுக்க முன்வநதார்கள்.

Mrs. Mallika Duraipandian & Family, Tuticorin.

இந்தப் புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் அவர்களையும், அவர்களுடைய அருமைக் குடும்பத்தினரையும் சேருவதாக! கர்த்தர் அவர்களை விசேஷித்த விதமாக ஆசீர்வதிக்கும்படி நீங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது ஐம்பது பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!

எமது புதிய வெளியீடுகள்!

82.	இரட்டிப்பான வரம்!	5	00
83.	சேனைகளின் கர்த்தர்!	5	00
84.	விருந்துசாலை!	5	00
85.	யார்? யார்? யார்?	5	00
86.	வாலிபனே எழுந்திரு!	5	00
87.	லேவியரே, ஆசாரியரே!	5	00
88.	இஸ்ரவேலே, நீ பாக்கியவான்!	5	00
89.	இயேசுவோடு இணைந்த ஜெபம்! (பால் யாங்கி சோ)	15	00
90.	தூய வாழ்க்கை!	5	00
91.	வளருங்கள்!	5	00
92.	மனம் திறந்து ஊழியரோடு!	5	00
	(பால் யாங்கி சோ)	15	00
93.	பெலத்தின்மேல் பெலன்!	5	00
94.	வெற்றியுள்ள வீட்டு ஜெபக்குழுக்கள்! (பால் யாங்கி சோ)	15	00
95	என் கண்கள் கண்டவை!	5	00
96.	பலிகள்!	5	00
97.	காலத்தை ஆதாயப்படுத்துங்கள்!	5	00
98.	சகல ஆறுதலின் தேவன்!	5	00
99.	நீ பெருகுவாய்!	5	00
100.	ரூத்தின் சரித்திரம்!	5	00
101.	ஆசீர்வாதத்தின் வழி!	5	00
102.	வஸ்திரங்களைக் காத்துக்கொள்!	5	00
103.	வேதம் இனிய வேதம்!	5	00
104.	இந்தியாவுக்காக...!	5	00
105.	சிறுகதைகளும் பிர.குறிப்புகளும் பாகம் IV	5	00
106.	அந்நியபாஷை வரங்கள்!	5	00
107.	தேவ ஜனமே!	5	00
108.	ஊழியருக்கு உதவி! (பால் யாங்கி சோ)	5	00
109.	இயேசுவின் ஜெயம் உங்களுக்கே!	5	00
110.	இரட்சிப்பு, தெய்வீக சுகம், ஆசீர்வாதங்கள்! (பால் யாங்கி சோ)	15	00
111	சுவிசேஷகர் டைரி!	10	00
112.	சபைகள் வளரட்டும்! (பால் யாங்கி சோ)	15	00

113.	ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ?	5 00
114.	ஆவிகளைப் பகுத்துணர்வது எப்படி?	5 00
115.	சில சம்பவங்களும் வேத வசனங்களும்!	5 00
116.	துணுக்... துணுக்... துணுக்குகள்!	5 00
117.	பக்தியுள்ளவனே, கலங்காதே!	5 00
118.	அறியப்படாதவர்கள்!	5 00
119.	பரலோகமே, என் சொந்தமே!	5 00
120.	நீ பயப்படாதே!	5 00
121.	இழந்துபோனதை பெற்றுக்கொள்!	5 00
122.	திருமணமும் நறுமணமும்!	5 00
123.	சாபங்களை முறிப்பது எப்படி?	5 00
124.	பரிசுத்தமாய் ஜீவிப்பது எப்படி?	5 00
125.	ஏன் கலங்குகிறாய்?	5 00
126.	பாடுகளா? எனக்கா? (பால் யாங்கி சோ)	10 00
127.	புது சிருஷ்டி!	5 00
128.	மனரம்மியம்!	5 00
129.	வேதனைகள் நீங்கட்டும்!	5 00
130.	பரிசுத்த உபவாச நாட்கள்!	10 00
131.	அதிசயங்களின் தேவன்!	5 00
132.	கைவிடப்பட்டால்!(டான் ஸ்டேன்டன்)	10 00
133.	சிங்கார மாளிகை!(B.பவுல்)	5 00
134.	துதிப்போம் வாரீர்!	5 00
135.	வெளிப்படுத்தலில் ஏழு சபைகள்!	10 00
136.	தேவ இரகசியங்கள்!	5 00
137.	கிருபை கிருபை கிருபையே!	5 00
138.	கைவிட மாட்டார்!	5 00
139.	வார்த்தையின் வல்லமை!	5 00
140.	முன்னோக்கி முன்னேறிச் செல்லுங்கள்!	5 00
141.	காத்திருக்கும் கர்த்தர்!	5 00
142	நானும் என் வீட்டாருமோவென்றால்!	5 00
143.	இரத்தத்தின் தேவன்!	5 00
144.	உன்னிடத்தில் என்ன இருக்கிறது?	5 00
145.	எழும்பு சீயோனே!	5 00
146.	அமர்ந்த தண்ணீர்!	5 00
147.	ஏறெடுத்துப் பாருங்கள்! (டான் ஸ்டேன்டன்)	5 00

148.	தேவன் நம்மோடு!	5	00
149.	நாற்பது!	5	00
150.	அக்கினி இறங்கட்டும்!	20	00
151.	மனம் மகிழும்!	5	00
152.	எரிந்து பிரகாசிக்கிற விளக்கு!	5	00
153.	அமலேக்கை மேற்கொள்ளுங்கள்!	5	00
154.	ஜெப தொனி!	5	00
155.	கன்மலை நீரோடைகள்!	20	00
156.	வழுவாதபடி காப்பவர்!	5	00
157.	நல்லவர், வல்லவர், போதுமானவர்!	5	00
158.	கர்த்தரின் கையெழுத்து!	5	00
159.	பகற்காலம் இருக்குமட்டும்!	5	00
160.	உண்டு...! உண்டு...! உண்டு...!	5	00
161.	இம்மட்டும், இனிமேலும்!	5	00
162.	யாக்கோபின் ஏணி!	5	00
163.	தேடிவந்த நேசர்!	5	00
164.	என் மீட்பர் உயிரோடிருக்கிறார்!	5	00
165.	தேவை மேல் வீட்டு அனுபவம்!	5	00
166.	ஆவிக்குரிய மகிழ்ச்சியின் இரகசியம்!	5	00
167.	ஸ்தோத்திர பலிகள் ஆயிரம்! (W. டேவிட்)	5	00
168.	பிரியமானவனே...!	5	00
169.	ருசித்துப் பாருங்கள்!	5	00
170.	அனல்மூட்டி எழுப்பிவிடு!	5	00
171.	காவலாளியோ?	5	00
172.	கொரியா எழுப்புதல்!	5	00
173.	முன்னேறும் ஊழியர்! (பால் யாங்கி சோ)	5	00
174.	சீயோனை நினைத்து...!	5	00
175.	வழிநடத்தும் வல்ல தேவன்!	5	00
176.	அசுத்த ஆவியை விரட்டுவது எப்படி?	5	00
177.	ஆவியும், மணவாட்டியும்!	5	00
178.	மாணிக்கக் கற்கள்!	5	00
179.	மிக மிக அதிகமாய்!	5	00
180.	என் நேசர் விசேஷித்தவர்!	5	00
181.	போதகர்களின் விலாசங்கள்!	10	00
182.	ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுடனே!	20	00

183.	தினம் தினம் தேவ வல்லமை!	20	00
184.	அடைக்கலமானவர்!	5	00
185.	ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால்...!	20	00
186.	தேவ தூதர்கள்!	5	00
187.	ஆனந்த பாக்கியம்!	5	00
188.	Our weapons of warfare!	10	00
189.	வளமான பிரசங்கி! (கிறிஸ்டோபர்)	5	00
190.	நானே ஜெபித்தேன்!	5	00
191.	முதல் அன்பும், முழு அன்பும்!	5	00
192.	கிச்சிலி மர நிழலில்!	5	00
193.	நல்ல போராட்டம்!	5	00
194.	நன்மையும் கிருபையும்!	5	00
195.	ஜீவ ஒளி!	5	00
196.	கண்மணிபோல!	5	00
197.	உறுதியான விசுவாசம்!	5	00
198.	நானே உனக்காக!	5	00
199.	ஸ்மித் விகிள்ஸ்வொர்த்!	5	00
200.	நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்!	5	00
201.	பாக்கியமான வாழ்வு!	5	00
202.	எங்களுக்கு இரங்கும்!	5	00
203.	சிறுகதைகளும், பிர. குறிப்புகளும் பாகம் V	5	00
204.	பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷம்!	5	00
205.	இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை!	5	00
206.	சிந்திக்க சிறுகதைகளும் தியானிக்க தியானங்களும்!	5	00
207.	சிறுகதைகளும் பிர. குறிப்புகளும் பாகம் VI	5	00
208.	கர்த்தருடைய குடும்பம்!	5	00
209.	ஆவியினாலேயே ஆகும்!	5	00
210.	இரகசிய வருகை! (S. பால்ராஜ்)	5	00
211.	ஆலயத்தின் ஆசீர்வாதங்கள்!	5	00
212.	ஜெபத்தைப் பற்றிய நூறு துணுக்குகள்!	5	00
213.	ஒளிதரும் விண்மீன்கள்!	5	00
214.	மின் மினிக்கள்!	5	00
215.	இரவிலும் வெளிச்சம்!	5	00
216.	மகா உபத்திரவ காலம்!(S. பால் ராஜ்)	5	00
217.	பேசும் ஆண்டவரே!	5	00

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 100 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A.,
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.